பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

தரமானதே சிறந்தது என்றால்




சொலிட்

பம்பையே வாங்குங்கள்

# உதயன்

விலை ரு 2. 50

When, only The best is Good Enough



Buy Solide PumpS

சுடர்: 4 விபவ ஸு மார்கழி மீ 25 உ திங்கட்கிழமை ஹிஜ்ரி 1409 ஜ அவ்வல் பிறை 29 (09-01-1989) UTHAYAN -A LIVELY TAMIL DAILY கதிர்: 40

## பதவியாவில் தாக்குதல்; 3 சிப்பாய்கள் மரணம்

கொழும்பு, ஜன 9

பதவியாவில் நேற்று இடம்பெற்ற தாக்குதல் ஒன்றில் இலங்கை இராணுவத்தைச் சேர்ந்த மூன்று சிப்பாய்களும் ஒரு சிவிலியன் சாரதியும் உயிரிழந்தனர்.

வேறு மூன்று சிப்பாய்கள் காயமடைந்தனர்.

மறைந்திருந்த சிலரே இத் தாக்குதலை நடத்தினர் என்று கூறப்படுகிறது. (ஒ-எ)

## திருமலையில் குண்டு வெடிப்பு; 3 ஜவான்கள் உயிரிழப்பு

கொழும்பு, ஜன 9

திருகோணமலையில் நேற்று இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவம் ஒன்றில் இந்திய அமைதிப் படையைச் சேர்ந்த மூன்று ஜவான்கள் உயிரிழந்தனர்.

இத்தகவலை கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். [உ-எ]

## ஜவான்களில் ஒரு பிரிவினர் இன்று திரும்புகின்றனர்

கொழும்பு, ஜன 9

இந்திய அமைதிப் படையின் மற்றொரு பட்டாலியன் இன்று காங்கேசன்துறையில் இருந்து தாயகம் திரும்புகிறது.

இந்த பட்டாலியன் நேற்று இந்தியா திரும்புவதாக இருந்தது. எனினும் அது பின்னர் இன்று வரை ஒத்திவைக்கப்பட்டது.

கொழும்பில் இந்தியத் தூதரகப் பேச்சாளர் இதனைத் தெரிவித்தார். (உ-எ)

### தொலைபேசிச் சேவை:

## 1,000 இணைப்புக் கொண்ட 2 பரிவர்த்தனை நிலையங்கள்

### வடக்கு, கிழக்கிற்கு அடுத்தமாதத்தில்

கொழும்பு, ஜன 9

வடக்கு, கிழக்கில் தனித்தனியாக ஆயிரம் இணைப்புகளைக் கொண்ட இரண்டு தொலைபேசிப் பரிவர்த்தனை நிலையங்கள் நிறுவப்படவுள்ளன.

இன்னும் ஒரு மாத காலத்தில் இந்தப் பரிவர்த்தனை நிலையங்கள் இயங்க ஆரம்பிக்கும் என தெரிவிக்கப்பட்டது

இத்தப் பரிவர்த்தனை நிலையங்களை வழங்க இந்தியா முன்வந்திருப்பதாக இந்திய வானொலி தெரிவித்தது. [உ-எ]

### பிரேமாஸவ சந்தித்தபின்

## தூதுவர் டிக்ஸிற் புதுடில்லி பயணம்

கொழும்பு, ஜன 9

கொழும்பில் உள்ள இந்தியத் தூதர் ஜே என். டிக்ஸிற புதுடில்லி பயணமானார்.

அதற்கு முன்னர் ஜனாதிபதி பிரேமதாஸவை திரு டிக்ஸித் சந்தித்துப் பேசினார்.

புதுடில்லியில் பிரதமர் ராஜீவ் காந்தி வெளியுறவு அமைச்சர் திரு. பி. வி. நரசிம்மராவ் வெளியுறவு அமைச்சுச் செயலாளர் திரு. ஜே பி. என். மேனன் ஆகியோரைச் சந்தித்து ஜனாதிபதிதேர்தலுக்குப் பின்னர் நிலவும் புதிய அரசியல் சூழ்நிலை பற்றி திரு. டிக்ஸிற் எடுத்துரைப்பார்

வடக்கு-கிழக்கு நிரந்தர இணைப்புச் சம்பந்தமான ஜூலை 5 இல் நடத்தப்படவுள்ள சர்வசன வாக்கெடுப்புப்பற்றி தமிழர் அமைப்புக்கள் தெரிவித்த ஆட்சேபனைகளையும் திரு டிக்ஸிற் இந்திய அரசிடம் சமர்ப்பிப்பார். (ஒ-எ)

## பாடசாலைகள் பெப்ரவரியில் சில தினங்கள் மூடப்படும்

கொழும்பு, ஜன 9

பாடசாலைகள் மீண்டும் வருகிற மாதம் இரு தடவைகள் மூடப்பட வேண்டியிருக்கும் என்று அறிவிக்கப்படுகிறது

நாடாளுமன்றப் பொதுத் தேர்தலுக்காக 2, 3 தினங்கள் பாடசாலைகள் மூடப்படும்.

ஆனல் கொழும்பு ரோயல் கல்லூரி மட்டும் ஒரு வாரம் வரை மூடப்படும் என்று கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

மீண்டும் பெப்ரவரி 24 முதல் மார்ச் 4 வரை பாடசாலைகள் மூடப்படும். ஜி. சி. ஈ. சாதாரணதரப் பரீட்சைகளை நடத்துவதற்காகவே பாடசாலைகள் மூடப்படும். (ஒ-எ)

### பிக்கு சுட்டுக் கொலை

தென் மாகாணத்தில் அரசு ஆதரவாளர் என்று கருதப்படும் பிக்கு ஒருவர் இனந்தெரியாத நபர்களினால் சுட்டுக் கொல்லப்பட்டார். [ஒ-எ]

### எதிர்பார்த்ததற்கு முன்பாகவே

# அவசரகாலச் சட்டம் 2 நாட்களில் நீக்கம்?

### வழமை நிலையை ஏற்படுத்த அரசு முயற்சி!

கொழும்பு, ஜனவரி 9

கடந்த 68 மாதங்களாகத் தொடர்ந்து அமுலில் இருக்கும் அவசரகாலச் சட்ட விதிகள் நாளை அல்லது நாளை மறுதினம் நீக்கப்படும். கொழும்பில் அரச அதிகாரி ஒருவரை மேற்கோள் காட்டி ஏஜென்ஸிச் செய்திகள் இதனைத் தெரிவித்தன.

அவசரகாலச் சட்ட விதிகள் எதிர்வரும் 15ஆம் திகதியுடன் காலவதியாகின்றன. எனினும் வழமை நிலைமை விரைவாக ஏற்படுத்துவதற்காக மூன்று தினங்கள் முன்னதாகவே இவ் விதிகளை நீக்க அரசு முடிவு செய்திருப்பதாகத் தெரிகிறது.

அவசரகாலச் சட்டத்தை நீக்குவதினால் எழக்கூடிய சில நிர்வாகச் சிக்கல்கள்பற்றி அரசு அதிகாரிகள் தற்போது பரிசீலனை செய்து வருகின்றனர்.

சகஜ நிலைமை வந்தவுடன் சாதாரண சட்டத்தின் கீழ் கைது செய்யப்படும் ஒருவரை 24 மணித்தியாலத்தினுள் நீதிமன்றத்தில் ஆஜர் செய்ய வேண்டும்.

வடக்கு. கிழக்கு மற்றும் தெற்கின் சில பகுதிகளில் நீதிமன்றங்கள் செயல்படாமல் இருப்பதால் —

கைது செய்யப்பட்டவர்களை 24 மணி நேரத்தில் நீதிமன்றத்தில் ஆஜர் செய்வது சாத்தியமாகுமா என்பது குறித்து அதிகாரிகள் ஆலோசித்து வருகிறார்கள். (உ-எ)

## மின்விநியோகம் காலையில் சீரடைவு இரவில் சீர்குலைவு

குடாநாட்டிற்கான நீர் மின் விநியோகம் நேற்றுக் காலை 7.30 மணி அளவில் சீரடைந்தது.

எனினும் நேற்றிரவு 8 மணிக்கு மின்சார விநியோகம் சீர்குலைந்தது.

மின் விநியோகம் சீர்குலைந்ததற்கான காரணம் என்னவென்பது இச்செய்தி அச்சுக்குப் போகும்வரை தெரியவில்லை. எனினும் சுன்னாகம் மின்சார நிலையத்துக்கு பிரதான இணைப்புகள் மூலம் கிடைக்கும் நீர் மின் விநியோகத்தில் தடை ஏற்பட்டதே மின்வெட்டுக்குக் காரணம் எனத் தெரிவிக்கப்பட்டது

காலையில் நீர் மின் விநியோகம் கிடைத்ததை அடுத்து சுன்னாகம் மின் நிலையத்தில் ஜெனரேட்டர்கள் மூலம் மின்சாரத்தை உற்பத்தி செய்யும் நடவடிக்கைகள் இடை நிறுத்தப்பட்டன.

ஆனல் இரவு ஊரடங்கு உத்தரவு அமுலுக்கு வரவிருக்கும் நேரத்தில் நீர் மின்சார விநியோகத்தில் சிக்கல் ஏற்பட்டதால்-

மீண்டும் ஜெனரேட்டர்களை இயக்கி யாழ். நகரின் முக்கிய இடங்களுக்கு மின் விநியோகத்தை ஏற்படுத்தும் வழமையான நடவடிக்கையையும் மேற்கொள்ள முடியவில்லை என மின்சார சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை யாழ் குடாநாட்டிற்கு மின்சார விநியோகத்தை வழங்குதற்கான திருத்த வேலைகளில் பெரும்பகுதி நேற்று முன்தினமே முடிவுற்றன. அதையடுத்து நேற்று முன்தினமிரவு சுமார் 10 மணியவில் வடக்கிற்கு பரீட்சார்த்தமாக சுமார் இரு மணித்தியாலங்கள் மின்சாரம் வழங்கப்பட்டது.

இதையடுத்து நேற்றுக் காலை 7. 30 மணிக்கு சீரான மின் விநியோகம் குடாநாட்டிற்குக் கிடைத்தது.

உக்குவெல மின் நிலையத்தில் உற்பத்தியாகும் 15 கே. வி மின்சாரமே

(6-ஆம் பக்கம் பார்க்க)

### ✱ பிந்திய செய்தி

### மீண்டும் மின்சாரம்

நேற்று நள்ளிரவு 11.45 மணிக்கு மீண்டும் யாழ் நகருக்கு மின் விநியோகம் கிடைத்தது.

### முச்சந்தி முரளி



அப்ப பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளுக்கு வருசத்திலை முக்கால்வாசி விடுதலை எண்டு சொல்லுங்கோ.........!

### இலங்கையுடன்

## நட்புறவு ஒப்பந்தத்திற்கு இந்தியாவும் விருப்பம்

புதுடில்லி, ஜன 9

இலங்கையுடன் நட்புறவு உடன்படிக்கை ஒன்றை செய்து கொள்வது பற்றியோ அல்லது இந்திய இலங்கை ஒப்பந்தம் குறித்து மீண்டும் பேச்சுக்கள் நடத்தவோ இந்தியா விருப்பமற்ற நிலையில் இருக்கவில்லை.

புதுடில்லியில் உள்ள இந்திய அரசு அதிகாரி ஒருவரை ஆதாரங்காட்டி கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்று முன்கண்டவாறு செய்தி வெளியிட்டிருக்கிறது.

தகவல் தந்த அதிகாரி தனது பெயரை வெளியிட விரும்பவில்லை.

''இந்திய - இலங்கை ஒப்பந்தத்தில் உள்ள சில ஷரத்துக்கள் குறித்து இலங்கையர் மகிழ்ச்சியடையவில்லை என்றால். அவர்களின் திருப்திக்காக அவ் வாசகங்களை நாம் மாற்றி அமைக்கத் தயாராக இருக்கிறோம்.

ஒப்பந்தத்துடன் இணைக்கப்பட்ட கடிதங்களில் உள்ள இரண்டு

(6-ஆம் பக்கம் பார்க்க)

### சுபநேரம்

9 - 1 - 1989
மார்கழி 25
திங்கட்கிழமை

சுபநேரம்
12.32 முதல் 2.02 வரை
ராகு காலம்
6.02 முதல் 9.32 வரை

### காணவில்லை

இலங்கை மின்சார சபையில் பணியாற்றி வந்த தரக்கட்டுப்பாட்டாளர் டாக்டர் டபிள்யு ஏ. அமரசிரி என்பவர் கடந்த 3ஆம் திகதியில் இருந்து திடீரெனக் காணமற் போய்விட்டார் என்று அறிவிக்கப்படுகிறது. (உ-எ)

### பிடிவாதத்தைக் கைவிட்டனர்

பொலீஸார் சார்பில் நீதிமன்றங்களில் ஆஜராவதில்லை என்ற முடிவை சட்டத்தரணிகள் சங்கம் நேற்றுமுதல் கைவிட்டது. (உ-எ)

### யாழ்தேவி புறப்பட்டது

யாழ்ப்பாணம், ஜன 9

ஆயிரத்து 567 பயணிகளுடன் யாழ்தேவி நேற்றுக்காலை யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கிப் புறப்பட்டது.

இதேவேளை கொழும்பில் இருந்தும் பயணிகள் ரயில் நேற்றுமாலையாழ்ப்பாணம் வந்துசேர்ந்தது.

## புதுடில்லியும் இருளில்

நேற்று பிற்பகலில் இருந்து புதுடில்லி மாநகர் இருளில் மூழ்கியது.

புதுடில்லிக்கு மின் விநியோகம் செய்யும், உத்தரப் பிரதேச 'கிரிட்' டில் ஏற்பட்ட பெரிய கோளாறு காரணமாகவே மின் விநியோகம் தடைப்பட்டது.

இதனல் இந்திய வானொலி, தூரதர்ஷன் ஒலி, ஒளிபரப்புக்கள் பாதிக்கப்பட்டன. ஜெனரேட்டர்கள் மூலம் புதுடில்லிக்குப் பகுதி பகுதியாக மின் விநியோகம் வழங்கப்பட்டது. [உ-எ]

## விசேட அதிரடிப்படை ஐ. ஜி. பியின் கட்டுப்பாட்டில்

### பொறுப்பு ரவியிடமிருந்து பறிப்பு

கொழும்பு, ஜன 9

விசேட பொலீஸ் அதிரடிப்படை, பொலீஸ் மா அதிபரின் (ஐ ஜி பி.) நேரடிக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட உள்ளது.

தற்போது இப்படையின் நிர்வாகக் கடமை மட்டும் பொலீஸ் மா அதிபரிடம் உள்ளது.

இனி அதிரடிப் படையை நெருக்கடி காலங்களில் பயன்படுத்துவது குறித்து பொலீஸ் மா அதிபரே தீர்மானித்து அதனைச் செயற்படுத்துவார்.

விசேட அதிரடிப் படைப் பிரிவு, முன்னள் ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவின் மகன் ரவி ஜெயவர்த்தனவின் பொறுப்பில் இயங்கியது குறிப்பிடத்தக்கது.

இதனிடையில் தேசிய உளவுப் பிரிவு தொடர்ந்தும் பாதுகாப்பு அமைச்சின் கீழ்தான் செயற்படும்.

உளவுப் பிரிவை பொலீஸ் மா அதிபரின் கீழ் கொண்டுவரவே புதிய ஜனாதிபதி முதலில் தீர்மானித்திருந்தார். பின்னர் அந்த யோசனையைக் கைவிட்டுவிட்டார்.

விசேட அதிரடிப் பொலீஸ் படையில் 2.500 பேர் வரையில் உள்ளனர். [ஒ-எ]

### வெலிக்கடைக் கொலைகள்

## நஷ்டஈட்டு வழக்கை விசாரிக்க முடியாதாம்

கொழும்பு, ஜன. 9

1983 கலவரத்தின் போது வெலிக்கடைச் சிறைச்சாலையில் தமிழ்ப் போராளிகள் கொல்லப்பட்டதற்கு, அரசிடம் நஷ்டஈடுகோரித் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை விசாரிக்க நீதிமன்றத்துக்கு நியாயாதிக்கம் இல்லை என்று அரசாங்கம் மனுச்சமர்ப்பிக்கஉள்ளது.

அடுத்த (பெப்ரவரி) மாதம் 2ஆம் திகதி இவ்வழக்கு விசாரணைக்கு எடுக்கப்படும் போது சட்டமா அதிபர் சார்பில் இந்த மனு சமர்ப்பிக்கப்பட உள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

வெலிக்கடைச் சம்பவத்தில் உயிரிழந்த 31 பேர்களின் உறவினர்கள் தாக்கல் செய்த இந்த நஷ்டஈட்டு வழக்கு கடந்த வியாழக்கிழமை கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

நாடாளுமன்றத்தில் சமீபத்தில் நிறைவேற்றப்பட்ட தண்டனைத் தவிர்ப்புச் சட்டத்தின் கீழ், இந்த வழக்கை விசாரிக்க நீதிமன்றத்துக்கு நியாயாதிக்கம் இல்லை என்றே சட்டமா அதிபர் தரப்பில் மனுத் தாக்கல் செய்யப்படவுள்ளது. (அ-எ)

## கொள்ளை போன பணத்தில் மற்றொரு பகுதியும் மீட்பு

யாழ்ப்பாணம், ஜன 9

யாழ்ப்பாணம், மடத்தடியில் உள்ள வி. ஜே. எஸ். எரிபொருள் நிலையத்தில் இருந்து கொள்ளையடிக்கப்பட்ட பணத்தின் மற்றொரு பகுதியும் மீட்கப்பட்டுள்ளது.

இந்த எரிபொருள் நிலையத்தில் இருந்து ஒரு லட்சத்து 77 ஆயிரத்து 236 ரூபா கொள்ளையிடப்பட்டிருந்தது.

கடந்த 29 ஆம் திகதி இதில் ஒரு பகுதியான 95 ஆயிரத்து 536 ரூபா மீட்கப்பட்டிருந்தது.

இரண்டாவது தடவையாக நேற்று 31 ஆயிரம் ரூபா மீட்கப்பட்டு வி. ஜே. எஸ். நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-10)

### ஆட்சேப மனு தயாராகிறது

கொழும்பு, ஜன. 9

ஜனாதிபதித் தேர்தல் முடிவுக்கு எதிரான ஆட்சேபனை மனுவை ஜனாதிபதி வழக்கறிஞர் எச். எல். டி. சில்வா தலைமையிலான வழக்கறிஞர்குழு ஒன்று தயாரித்துக் கொண்டிருக்கிறது. [உ-எ]

### வயோதிபர் சூட்டுக்குப் பலி

வட்டக்கச்சி, ஜன 9

கண்டாவளையை அடுத்துள்ள பெரியகுளம் பகுதியில் கடந்த சனிக்கிழமை அமைதிப் படை

[6 ஆம் பக்கம் பார்க்க]

இளைய கலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

பாவித்த அலுமாரி, கட்டில் மெத்தைகள், குளிர்சாதனப் பெட்டி, பெரிய சன்ணுடிமேசை, சாப்பாட்டு மேசை, Show-case, Oven, Kettle Glassware மற்றும் பல உடன்மலிவு விலையில் விற்பனைக்குண்டு. 164, ரெம்பிள்ரோட், நல்லூர் கோயில் பின் வீதி. (Dr. அழகக்கோன் டிஸ்பென்சரி முன்பாக.) (8640)

பாவித்த தளபாடங்கள், கட்டில்கள், Drawing room sets, Chriso, cabinet, Dressing table Wheel chair, Baby cot, Dinner-coffee set. Revolving book case. Wardrobe, Dressing table, Brass ware. Eversilver things, Fan Sanyo குளிர்சாதனப்பெட்டி மற்றும் பல பொருட்கள் விற்பனைக்குண்டு. Parasakthy Press 81 K.K.S Road Kokuvil. (8779)

புதிய இந்தியன பாக்கியலட்சுமி வெதிலைறண்டர் 1½ லீற்றர் விற்பனைக்கு உண்டு விலை குறித்து கடித மூலம் தொடர்பு கொள்ளவும் M. G இலைரான்வி, முல்லைத்தீவு. (8793)

## தேவை

கடைச்சல் இயந்திரத்தில் வேலை செய்வதற்கு முன் அனுபவம் உள்ள லேத்மன் தேவை தொடர்புகளுக்கு "யூரோவிக்" 449. ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (8799)

புதிதாக தொடங்கப்பட இருக்கும் சவர்க்காரத் தொழிற்சாலைக்கு தொழிலாளர் தேவை அனுபவம் வயது, கல்வித்தகைமை என்பவற்றுடன் விண்ணப்பிக்கவும். தொடர்பு; C/o No.24 உதயன். (8635)

வெயிட்டர் வேலைக்கு நன்கு அனுபவம் உள்ள ஆட்கள் தேவை. யாழ் நகரில் கடைகளில் வேலை செய்தவர்களுக்கு முதல் இடம் கொடுக்கப்படும். தொடர்பு:- றிக்கோ ஹோட்டல், 370, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 8786

## தவறிவிட்டது

செல்வநாயகம் - புஸ்பவதி, வேலணை கிழக்கு, வேலணை [செட்டிப்புலம்] இந்த விலாசமுடைய அடையாள அட்டை யாழ்ப்பாணத்தில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (8851)

குமாரவேலு கலாராணி ஆகிய எனது அடையாள அட்டை இல. 645332856 V அரியாலை சந்திக்கும் தபால் கட்டை சந்திக்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் அரியாலை சந்தியிலுள்ள கிளி கடையில் அல்லது உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (8629)

## வாடகைக்கு

சகல வசதிகளுடனும் கூடிய வீடு வாடகைக்கு உண்டு. அட்வான்ஸ் Rs 15,000/- வாடகை மாதாந்தம் Rs 500/- தொடர்பு கொள்ளவும். திருமதி அஞ்சலினா - ஸ்ரலின் 466/4 செனியோண் (கத்தோலிக்க) கோயில் ஒழுங்கை, கண்டுக்குளி யாழ்ப்பாணம். (8852)

## Sale

Furniture For sale. Contact: 14/2, fletcher's lane, Chundikuli. (8800)

## WANTED

Audit/Accounts trainees those who have passed the G.C.E A/L with Accounts As a subject could apply. Apply immediately to office Manager, Accounting system and services (Jaffna) Ltd 145, main street Jaffna. (8795)

## சேவை

தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும் விற்கவும் அத்துடன் சிறந்த முறையில் திருத்தவும் நாடுங்கள்: Fudo Enterprises 39/17, மின்சார நிலைய வீதி, 3 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம் (Shabra-Samy & Co அருகாமையில்) (C/945)

## வகுப்புக்கள்

ஆண்டு 4 தொடக்க O/L (புதிய) வரையுள்ள வகுப்புகளுக்கானபாடங்களும், ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சை வகுப்புக்களும் ஆரம்பமாகிவிட்டன விபரங்களுக்கு எலைற் இன்ஸ்ரிரியூட் வண்ணார்பண்ணை தபாலகம் முன்பாக) 99, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். (8797)

## விஞ்ஞானம்

வெளிவந்து விற்பனையாகின்றது ஆரம்ப விஞ்ஞானம் ஆண்டு 4, 5, 6. சுருக்கமை M C பிரான்சிஸ் (முன்னைநாள் இந்துக்கல்லூரி ஆசிரியர்) N J ஞானப்பொன்ராஜ் (சென்ஜோன்ஸ் கல்லூரி) யாழ்ப்பாண முன்னணி கல்லூரிகளின் முக்கிய பாடநூல். கல்லூரிகளுக்கும் ஆசிரியர்களுக்கும் வியாபாரிகளுக்கும் கழிவுவழங்கப்படும். வெளியீடு விற்பனை, பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம் (8590)

# 45ஆம் நாள் நினைவஞ்சலி

பிறந்த திகதி: 29-12-1964



இறந்த திகதி: 26-11-1988

## திரு. இரத்தினம் பேரின்பநாதன்

(அப்துல்லா, அப்பன்)

எங்கள் யாவர் மனதிலும் நீங்கா இடம் பெற்றுவிட்ட நீ! என்றும் எம் மனங்களில் வாழ்ந்து கொண்டேயிருப்பாய்! என்றும் உன் நினைவுகள் எம்மை விட்டு அகலா.

அப்பா, அம்மா, சகோதரங்கள், மருமக்கள்
மைத்துனர், மச்சான்மார், பிள்ளைகள், நண்பர்கள்,

இலகடி,
கோப்பாய் வடக்கு,
கோப்பாய்.


(C/1121)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்;
1901 07-15

மலரடியில்:
1987 12-23

திதி:
1989-01-10



## அமரர் ச. நா. கந்தையா அவர்கள்

(ஓய்வு பெற்ற அதிபர், நயினாதீவு)

| | | | |
|---|---|---|---|
| தெய்வமாய் | எங்கள் | அன்பில் | தினைத்தனை |
| சித்தம் | நிறைந்த | என்றும் | நினைந்து |
| ஐயா | உங்கள் | உருகி | வழிபடும் |

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்...

55, கல்லூரி ஒழுங்கை, வண்ணார்பண்ணை. (8629)

# 4 ஆம் ஆண்டு நினைவாக..!



அன்னை மடியில்:
10- 01- 1961

ஆண்டவன் அடியில்:-
9- 01- 1985


## செல்வன் சிவகுரு சிவேந்திரன்

அன்புச் செல்வமே!
எம் இதயத்தின் வானத்தில்
சூரியனாய் உதித்தவனே!
ஏன் இங்கு எமை விட்டு
எட்டப் போய் மறைந்தாயோ?
எம் இதயத்தின் இரத்த நாளங்களில்
பொறிக்கப்பட்ட உன் நினைவை
யாரால் தான் அழிக்க முடியும்
அவை எம்முடனே நிலைத்திருக்கும்
ஆண்டுகள் நான்கானாலும்
இதயக் கோயிலில் உலாவி வரும்
உன் நினைவுப் படகுடனே
நாட்களை நகர்த்தும்,

அன்பு அம்மா, சகோதரர்.

அச்சுவேலி (8637)

# 31ஆம் நாள் நினைவு அஞ்சலியும் வீட்டுக்கிருத்திகை அழைப்பும்



## அமரர் அற்புதலிங்கம் சுதர்சன் (சுசி)

(யா/ மகாஜனக் கல்லூரி வித்தியாலய 10-ஆம் ஆண்டு மாணவன்)

அன்னை மடியில்: 20 - 12 - 1974
இறைவனடியில்: 10 - 12 - 1988

வீட்டுக் கிருத்தியம் 09-01-1989

திங்கள் (இன்று)

உண்மை பேசுவோர் உயர்வடைவர்!
என எங்களுக்குப் போதித்து -
நீயும் சிரித்து
எங்களையும் சிரிக்க வைத்தாய்!
பழனி முருகனுக்கு மலர் சொரியப்
போகின்றேன் என்ற நீ
பழனி வேலனின்
மலர்ப் பாதம் சென்றுவிட்டாயே!
உன் ஆத்மா நிலையான
சாந்தி பெற பிரார்த்திக்கின்றோம்!
என்றும் உனை மறவோம்! - நினைப்போம்!
நிதம், நித்தம் உங்கள் பிரிவால் வாடும்;

அன்புத் தந்தை, தாய்
அக்கா, தங்கை (சுமி), மற்றும்
உற்றார், உறவினர்கள், நண்பர்கள்.

இன்று நடைபெறும் சபிண்டீகரண கிரியையிலும் அதனையொட்டி நண்பகல் போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சி. அற்புதலிங்கம்,
யா/யூனியன் கல்லூரி.
தெல்லிப்பளை.

அச்சுவேலி வடக்கு.

(C-1258)

# சைவத்தின் சிறப்பை வெளிப்படுத்த சமயப் போதனை

மண்டைதீவு, ஜன. 9

எமது கிராமத்திலுள்ள சைவ இளைஞர்கள் யுவதிகளுக்கு சமய போதனைகளை வழங்குவதன் மூலம் சைவ சமயத்தின் சிறப்புக்களை அறியச் செய்யமுடியும்.

மண்டைதீவு இந்து இளைஞர் திருமுறைக் கழகத்தின் மாதாந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் கழகச் செயலாளர் திரு. என். விஜயசுந்தரம் மேற்கண்டவாறு கூறினார்.

திரு. உமாபாலன் கூட்டத்துக்கு தலைமை வகித்தார்.

திரு. விஜயசுந்தரம் தனது உரையில் மேலும் கூறியதாவது:

"எமது கிராமத்திலுள்ள சைவ ஆலயங்கள் எல்லாம் சிறப்பாக செயல்படுகின்றன.

இவ் ஆலயங்களின் விசேஷ உற்சவ தினங்களில் இங்குள்ள இளைஞர்களும் யுவதிகளும் தவறாது கலந்து கொள்ள வேண்டும்.

அத்துடன் ஆலய திருப்பணிகளுக்குத் தம்மாலான உதவிகளை வழங்க வேண்டும்" என்றார்.

திரு. என். மோகன்ராஜ் பேசுகையில் எமது கிராமத்தில் இம் மாதிரியான இளைஞர் அமைப்பு முன்பு ஒருபோதும் இருந்தது இல்லை.

இப் புதிய இளைஞர் அமைப்பு ஆத்மீகத்துறையூடாக எமது சமயத்துக்குத் தொண்டு புரியும் இப்படி அவர் கூறினார். (ச-88)

## நியமனம்

கரவெட்டி, ஜன 9

பருத்தித்துறை உதவி அஞ்சலக அதிபர் திரு. ரீ. ரீ. சண்முகநாதன் கொழும்பு வெள்ளவத்தையிலுள்ள அஞ்சல் நிலைய அதிகாரிகளுக்கான பயிற்சிக்கல்லூரிக்கு உதவி விரிவுரையாளராக நியமிக்கப்பட்டுள்ளார் (ஞ 70)

# எமது நேற்றைய புதிய வெளியீடு

உஷா சினிமா

✶ அர்ஜுன் ✶ நிரோஜா

நடித்த

## வெற்றிச் செல்வன்

(ஒரிஜினல் பிரதி)

(C-1122)

# பெண் ஊழியர்கள் தேவை

எமது கம்பனியில் உற்பத்திப் பகுதிக்கு [Production Section] பெண் ஊழியர்கள் தேவை. நேர்முகப் பரீட்சை 9-ஆம் 10-ஆம் 11-ஆம் திகதிகளில் காலை 9 மணி முதல் 12 மணி வரை நடைபெறும்.

பொது முகாமையாளர்.

**அன்றீஸ் அன் கம்பனி லிமிட்டற்,**
கண்டி வீதி, நாவற்குழி.

(8620)

# 31 ஆம் நாள் நினைவு அஞ்சலி



## பொன்னுத்துரை வண்ணக்கிளி (முகுந்தன்)

அன்னையின் மடியில்:- 02- 08 1954
ஆண்டவன் அடியில்:- 11- 12- 1988

எங்கள் குடும்ப விளக்காய் விளங்கிய எங்கள் மகனே! நீங்கள் வருவீர்கள் என்றெண்ணி வழிமேல் விழி வைத்த வண்ணம் காத்து நின்றோம் காத்துநின்றோம். இது நடக்கும் என்று எதிர் பார்க்கவில்லை, எதிர் பார்க்கவில்லை. தஞ்சம் என்று புகுந்த உங்களையோ தரையினிலே போட்டார்கள்.

உங்கள் பிரிவால் துயருறும்:
அன்னை, சகோதரர்கள்
மைத்துனர்கள், மருமக்கள்.

வீரமாணிக்கதேவன் துறை,
மயிலிட்டி. (8621)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டில் மீண்டும் புகையிலைச் செய்கை

சுன்னாகம், ஜன 9

குடாநாட்டின் பல பகுதிகளிலும் புகையிலைச் செய்கையில் விவசாயிகள் பெருமளவில் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த பல வருடங்களாக நாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலையாலும் சந்தைப்படுத்த முடியாத காரணத்தாலும், நிலவிய பாதிப்பான சூழ்நிலையாலும் புகையிலைச் செய்கை அடியோடு நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

இதனால் விவசாயிகள் தமது வருமானத்தில் பெருமளவை இழந்தார்கள்.

தற்போது புகையிலைச் செய்கையின் பருவ காலம் ஆரம்பித்துள்ளது. பல பகுதிகளிலும் விவசாயிகள் ஆர்வத்தோடு தமது பணிகளை மேற்கொண்டுள்ளனர்.

பசளைப் பயிர் வகைகளுக்கும் மவுசு ஏற்பட்டுள்ளது.

யாழ் மாவட்டத்தில் இயங்கும் கமநலசேவை நிலையங்களில் தேவையான அளவு 'யூறியா' தச்சது. உரமும் போதுமான அளவு கையிருப்பில் இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. (இ-27)

## திருடனுக்கு மொட்டைஅடிப்பு

கோப்பாய், ஜன 9

கோப்பாய் சந்தியில் திருடன் ஒருவன் மொட்டை அடிக்கப்பட்டு தன்னால் களவாடப்பட்ட பொருள்களைச் சுமந்தவண்ணம் பொதுமக்களின் பார்வைக்காக நிறுத்தப்பட்டார். [இ-72]

## 2 வருட சம்பள முற்பண சுற்று நிருபம்

அரச ஊழியர்களின் ''இரண்டுவருட சம்பள முற்பணக் கடன்'' பற்றிய சுற்று நிருபம் யாழ் செயலகத்தினால் திணைக்களங்களுக்கு அனுப்பப்பட்டது.

பாதிக்கப்பட்ட அரச ஊழியர்கள் இரண்டு வருட சம்பள முற்பணக் கடன் பெறுவதற்கு பிணையாளர் தேவை இல்லை என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. [இ-5]

## 89 A/L விஞ்ஞான மாணவர்கட்கு

துரித மீட்டல் இரசாயனவியல்

Mon. 2-15 — 4-15 p. m.

ஆரம்பம்: 09-01-89

Mr. நாகரட்ணம் B Sc

3rd Cross Street, JAFFNA.

(C/1238)

## C. I. M. A. - Stage I - Batch No. II

May 1989

வாரநாள் புதிய பிரிவு வகுப்புக்கள் ஆரம்பம்:

18 th January 1989

உங்கள் பதிவுகளுக்கு:

**NORTH CEYLON TECHNICAL INSTITUTE**

14, St. Peters Lane,
Hospital Road,
JAFFNA.

C. I. M. A. Stage I, II & III A. A. T. Prelin, Inter & Finals I. D. P. M. Part I & II, I. A. B. all stages வகுப்புகளும் ஆரம்பமாகி நடைபெறுகின்றன. (C/1228)

## Marriage Proposal Bureau
## திருமண நிறைவேற்று நிலையம்

140, அரசடி வீதி, கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

ஸ்தாபிதம்: 1962 பதிவு எண்: 13109

அன்புடையீர்!

எங்கள் திருமண நிறைவேற்று நிலையத்தின் இருபத்தைந்தாவது ஆண்டு நிறைவை உங்களுடன் கலந்து கொண்டாடுவதில் நாம் மகிழ்ச்சி அடைகின்றோம்.

இலங்கையிலே முதன்முதலாக ஸ்தாபன ரீதியாக ஆரம்பித்து பல்லாயிரக்கணக்கான திருமணங்களை நிறைவேற்றிய இருபத்தைந்து வருட ஈடு இணையற்ற சேவையில் எங்கள் அனுபவ முத்திரையைப் பதிப்பதற்கு இதுவரை நீங்கள் தந்த ஆதரவிற்கு நன்றி.

இந்நாளில் உங்கள் பிள்ளைகளின் திருமணங்களை நிறைவேற்றுவதில் நீங்கள் படுகின்ற சிரமங்களைப் போக்குவதற்காக, நீங்கள் வாழுகின்ற உங்கள் ஊர்களில் எங்கள் கிளை ஸ்தாபனங்களைத் திறந்துள்ளோம்.

நீங்கள் நேரில் வந்து உங்கள் விண்ணப்பங்களைப் பதிவு செய்தால் உங்கள் விருப்பப்படி திருமணங்களை நிறைவேற்றிக் கொள்ளலாம்.

எங்கள் கிளை ஸ்தாபனங்கள்:

உரும்பராய் — தெல்லிப்பளை — மாவிட்டபுரம் — சித்தங்கேணி
அச்சுவேலி — சாவகச்சேரி — நெல்லியடி — வேலணை
கோண்டாவில் மேற்கு — இளவாலை — கிளிநொச்சி — வவுனியா

நிர்வாக இயக்குநர்
புலவர் செ. து. தெட்சணாமூர்த்தி.

கொழும்பு அலுவலகம்:

161/1, 2 ஆவது மாடி,
காலி வீதி, கொழும்பு - 4.

(8594)

# வெண்டிச் செய்கை வைரஸால் பாதிப்பு

கொக்குவில், ஜன 9

யாழ்மாவட்ட விவசாயிகள் பயிரிட்டுள்ள வெண்டிச் செடிகளை ஒருவித வைரஸ்நோய் தாக்குவதால் எதிர்பார்த்த பலனைப் பெற முடியவில்லை.

இந்த நோய் பிடித்த வெண்டிச் செடிகளின் இலைமஞ்சள்நிறம் அடைகின்றது. அவற்றின் நரம்புகளிலும் கோடுகள் ஏற்படுகின்றன என்று விவசாயிகள் கூறுகின்றார்கள்.

இந்த வைரசு நோயைக் கட்டுப்படுத்த மருந்து எதுவும் இல்லாத நிலையில் விவசாயிகள் நோய்பிடித்த செடிகளைப் பிடுங்கி எடுத்துப் புதைக்கின்றார்கள். (க-69)

## New Master Institute

B. M. C. Lane, Jaffna.

## 89 A/L

DAY CLASSES

(திங்கள் — வெள்ளி)

பிரிவு III

நாளை ஆரம்பம்

காலை 7-30 மணி

| | |
|---|---|
| PHYSICS | திரு. நந்தகுமார் |
| CHEMISTRY | திரு. மகேஸ் |
| BOTANY | திரு. செல்வநேசன் |
| ZOOLOGY | திரு. நாகநாதன் |
| PURE & APP. MATHS | திரு சந்திரமோகன் |

✶ DAY CLASSES பிரிவு I, பிரிவு IIக்கு உரிய வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

✶ ஒவ்வொரு மாதமும் 160 மணித்தியாலங்களுக்குக் குறையாமல் வகுப்புக்கள் நடைபெறும்.

(C/1240)

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் சு. கதிர்காமநாதன்**

[பிரபல வர்த்தகர், சாவகச்சேரி.]

மண்ணில்: 06-05-1946 மனதில்: 22-12-1987

திதி: 09-01-1989

நினைத்தொன்று சொல்லாயோ நெஞ்சே-எனைத்தொன்றும்
எவ்வநோய் தீர்க்கும் மருந்து
— திருக்குறள் —

(நெஞ்சமே! இந்தத் துன்பம் தரும் நோயினைத் தீர்க்கும் மருந்து ஏதாயினும் ஒன்றை நினைத்துப் பார்த்து எனக்கு நீயாயினும் சொல்லமாட்டாயோ?)

ஆண்டொன்று ஓடி மறைந்தது
அன்பனே! உன்னை நாம் பிரிந்து-
நீண்ட உன் பணிகளும் சேவைகளும்
நித்தியமாய் என்றும் நிற்குமையா!
காண்டற் கரிய தவப்பேறே - எம்
கண்கள் குளமாக - உன் நினைவின்
பூண்ட சிந்தனை உருக்கிடவே - நீ
பொன்னடியமர வழுத்துகிறோம்.

மனைவி, மக்கள்,
உறவினரும்.

பெரியமாவடி,
சாவகச்சேரி.

(8805)

# ஆற்றல் மட்டும் எழுத்தாளனை உருவாக்கி விடுவதில்லை

## மனிதத்துவப் பண்பும் காணப்படவேண்டும்

யாழ்ப்பாணம், ஜன.9

ஆற்றல் மட்டும் ஓர் எழுத்தாளனை உருவாக்கி விடுவதில்லை. எழுத்தாளனின் பின்னால் மனிதத்துவப் பண்பு காணப்படவேண்டும். ஜீவாவின் கருத்துக்களுக்கு மதிப்பு உள்ளதற்குக் காரணம் அவரில் தேங்கிக் கிடக்கும் மனிதத்துவப் பண்புகளே.

கோகிலா மகேந்திரன் இவ்வாறு கூறினார்.

மல்லிகைப் பந்தலின் ஆறாவது நூலான தூண்டில் வெளியீட்டு விழா அண்மையில் நடைபெற்றது.

விழாவில் கோகிலா மகேந்திரன் தலைமை வகித்து உரையாற்றினார்.

அவர் மேலும் கூறியதாவது:

இங்கிலாந்தைச் சேர்ந்த 'ரசல்' என்ற அறிஞரை அணுகிய ஒருவர் உங்கள் தலைமயிர் நரைத்துக் காணப்படுகின்றதே இதனை நீக்க நீங்கள் ஏதும் முயற்சி செய்யவில்லையா என்று கேட்டார்.

அதற்கு அவர் எனது தலை நரைத்துக் காணப்படுவதையிட்டு நான் மகிழ்ச்சி அடைகின்றேன். ஏனென்றால் தலை நரைத்த பின்னர் சொல்வதற்கு சமூகத்தில் மதிப்பு அதிகம் என்று கூறினார்.

இதேபோல ஜீவாவின் ஆழமான கருத்துக்களுக்கு காரணம் அவரது வயதும் அனுபவமும் என்றால் மிகையாகாது.

கேள்வி பதிலாகவெளி வரும் இலங்கைத் தமிழ் நூல்கள் வரிசையில் தூண்டில் இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ளது.

இது ஜீவாவின் ஒரு கோணத்தைக் காட்டுகின்றது இனி வெளிவரப்போவதாக அவர் கூறுகின்ற 'ஆசிரியர் தலையங்கத் தொகுப்பு' அவரது மற்றுமொரு கோணத்தைக் காட்டும்.

ஜீவாவின் முழுத் தோற்றத்தையும் நாம் காண்பதற்கு ஜீவா தனது சுயசரிதையை காலம் தாழ்த்தாது எழுதியே ஆகவேண்டும். இப்படி அவர் கூறினார்.

கம்பன் கழக அமைப்பாளர் திரு ஜெயராஜ் தனது உரையில் 'இன்று பலர் இலக்கியம் படைக்காமல் இருப்பதற்குக் காரணம் சூழ்நிலை, அமைதியின்மை காணப்படுவதே.

''இவ்வாறான அமைதியற்ற சூழ்நிலையிலும் மல்லிகையை வெளிக்கொண்டு வருகின்ற பெருமையும் மல்லிகைப் பந்தல் நூல்களை ஒழுங்காக வெளியிடுகின்ற பெருமையும் ஜீவாவுக்கு உண்டு'' என்றார்.

நூல் ஆசிரியர் திரு. டொமினிக் ஜீவா உரை நிகழ்த்துகையில், ''சிறுகதை, கவிதை, நாவல் இவை மட்டுமே இலக்கியங்கள் அல்ல. வேறு புதிய வடிவங்களிலும் இலக்கியங்கள் படைக்கப்படவேண்டும்.

எவ்வளவோ தடைகள், தடங்கல்கள் மத்தியில்தான் மல்லிகை வளர்ந்து வந்துள்ளது. இதற்குரிய இடம் இலங்கையிலும் இந்தியாவின் ஏனைய பகுதிகளிலும் வழங்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் எழுத்தாளர்களின் ஆக்கங்களை வெளியிடுவதற்கு போதுமான வெளியீட்டு நிறுவனங்கள் இல்லை. இதைத்தான் கவனத்தில் கொள்ளாவிட்டாலும் பத்து எழுத்தாளர்கள் கூடியிருந்து கதைப்பதற்கு ஒரு இடம்தானும் இல்லை.

இக்குறையைப்போக்க செல்வந்தர்கள் வசதி படைத்தவர்கள் முன்வரவேண்டும் என்றார்.

புலவர் ஈழத்துச் சிவானந்தன் கருத்துரையாற்றுகையில் 'திருக்குறள் பாணியில் இந்த நூல் வெளியிடப்பட்டுள்ளது வரவேற்கத்தக்கது' என்றார்.

நூலாசிரியர் திரு. டொமினிக் ஜீவாவிடம் இருந்து முதல் பிரதியை திரு. மனோகரபூபன் பெற்றுக்கொண்டார். (இ-5)

## உருளைக்கிழங்கு

கோப்பாய் பகுதி விவசாயிகள் கடந்த வருடங்களைப்போல் அல்லாது இவ்வருடம் பெருமளவு உருளைக்கிழங்கு பயிரிடுகின்றனர். (இ-72)

## T. V. ரவல்ஸ் & ரூரிஸ்ட்

பெருமையுடன் வழங்கும்

உடனடி வேலைவாய்ப்புகள்

சவூதி அரேபியா

SAUDI ARABIA ALRAJHI CO:

| | | |
|---|---|---|
| (1) ஸ்ரீல் பிற்றர் | சம்பளம் | 650 SR |
| (2) கூரை ஓடு பிற்றர் | ,, | 650 SR |
| (3) மேசன் | ,, | 650 SR |
| (4) தச்சு வேலையாட்கள் | ,, | 650 SR |
| (5) பிளம்பர்ஸ் | ,, | 650 SR |
| (6) டீசல் மெக்கானிக் | ,, | 650 SR |
| (7) பெற்றல் மெக்கானிக் | ,, | 650 SR |
| (8) சாரதிகள் H. V. | ,, | 650 SR |
| (9) ஓட்டோ எலக்ரிஷன் | ,, | 650 SR |
| (10) எலக்ரீஷன் | ,, | 650 SR |
| (11) மெக்கானிக் | ,, | 650 SR |
| (12) வெல்டர்ஸ் | ,, | 650 SR |
| (13) Civil Supervisor | ,, | 800 SR |
| (14) கிளீனர்ஸ் 300 பேர் | ,, | 490 SR |

தங்குமிடம், அளிக்கப்படும்.

Food allowance will be paid

வயதெல்லை (Age Limits) 21 — 48

குவைத்நாட்டில் வேலைவாய்ப்பு

300 கிளீனர்ஸ் சம்பளம் 35 KD

வயதெல்லை 18 — 48 வரை

No Food தங்குமிடம் அளிக்கப்படும்

முக்கிய குறிப்பு:

எமது காரியாலயம் திறந்திருக்கும் நேரம் காலை 8.00 பி ப. 5.00 மணி வரையும் ஞாயிற்றுக்கிழமை காலை 8 00 2 00மணி வரையும்

**T.V. Travels & Tourist**

BROWN ROAD,
(Railway Station Front)
KOKUVIL.

(C/1258)

'சற்றடே றிவியூ'
நிறுவனத்திலிருந்து
தமிழில் ஒரு வாரப்பத்திரிகை

## 'திசை'

14 - 1 - 89 இல் வெளிவருகிறது.

✶ சமூக பொருளாதாரப் பிரச்சினைகள்
✶ சர்வதேச - இலங்கை அரசியல் நிலைமைகள்
★ கலை, கலாசாரம் (சினிமா, நாடகம், சிறுகதை, கவிதை, இலக்கிய விமர்சனம்)
✶ விஞ்ஞானம் (இன்றைய அறிவியல் முன்னேற்றங்கள் — அதன் பயன்பாடு — தீமைகள்)
✶ கல்வி (வளர்ச்சிக்குரிய ஆய்வுகள்)
✶ விளையாட்டுக்கள் பற்றிய விடயங்கள்

இன்னும் பல சுவையான அம்சங்களை உள்ளடக்கி வெளிவருகிறது!

முற்பணம் செலுத்தக் கூடிய முகவர்கள் தொடர்பு கொள்ளவும்.

முகவரி: 'திசை'
118 நான்காம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.

(C/1120)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுமக்கள் பாதிக்கப்படாதவாறு தபால் ஊழியர் செயலாற்ற வேண்டும்

## பிரதேச அத்தியட்சகர் அறிவுரை

யாழ்ப்பாணம், ஜன. 9

பொது மக்களை எந்த வகையிலும் பாதிக்காத வகையில் தபால ஊழியர்கள் சேவையாற்ற வேண்டும். பொது மக்களுடன் நல்லுறவாகவும் நற்பண்புடனும் ஊழியர்கள் பழக வேண்டும. கடமை நேரத்தில் மது போதையுடன் கடமையில் ஈடுபடக் கூடாது.

வட பிரதேச தபால் அத்தியட்சகர் திரு. சேதுகாவலர் தபாலக ஊழியர்கள் மத்தியில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ் பிரதம தபால் அலுவலகத்துக்கு விஜயம் செய்த அவர் அங்குள்ள தபாலக ஊழியர்களின் குறைகளைக் கேட்டறிந்தார்

அவர் தொடர்ந்தும் அங்கு பேசுகையில் கூறியதாவது:-

ஊழியர்கள் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு உள்ள திராவிடக் கோட்பாடுகளை உள்ளடக்கிய வர்களாக நடந்து கொள்ள வேண்டும்:

ஊழியர்களுக்கு உள்ள குறைபாடுகளை உயர் பீடத்துக்கு எடுத்துச் சொல்லி அவர்களின் குறைபாடுகளை கூடிய விரைவில் நிவர்த்தி செய்வேன்.

யாழ். பிரதம தபால் அலுவலகத்துக்கு மின்சார விநியோகம் பெரும் சிர் கேடாக உள்ளதன் காரணமாக ஜெனரேட்டர் ஒன்றையும் கொள்வனவு செய்யலாம் என முடிவு செய்துள்ளேன்.

சமயாசமய ஊழியர்களாகச் சேவையாற்றும் ஊழியர்களை குறைந்த காலத்துக்குள் நிரந்தர ஊழியர்களாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

அவருடன் யாழ். மாவட்ட தபால் அத்தியட்சகர் திரு எஸ். கனகசுந்தரமும் விஜயம் செய்திருந்தார். (இ-10)

## புனருத்தாரணம்

அனலைதீவு, ஜன. 9

அனலைதீவைச் சேர்ந்த பிரசித்தி பெற்ற புளியந்தீவு நாகதம்பிரான் கோவில் புனருத்தாரண வேலைகள் துரிதமாக நடைபெறுகின்றன.

ஆலய பரிபாலன சபை பொது மக்கள் உதவியுடன் இதனைச் செய்து வருகிறது.

மார்ச் மாதமளவில் கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது.

இக் கோவிலின் வடிவமைப்பு திருகோணமலை கோணேசர் ஆலயத்தை ஒத்திருப்பது குறிப்பிடத்தக்கது (இ-18)

## பாடசாலை மாணவர் சுகாதார கல்வித்திட்டமிடல் கருத்தரங்கு

பாடசாலை மாணவர்களின் சுகாதாரக் கல்வித்திட்டமிடல் சம்பந்தமான கருத்தரங்கு ஒன்றை கல்வித்திணைக்களமும் சுகாதாரத் திணைக்களமும் இணைந்து எதிர்வரும் 11ஆம் திகதி யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடத்த உள்ளன.

கல்விப் பணிப்பாளர் திரு. வெ. சபாநாயகம் இதற்கான ஒழுங்குகளைச் செய்துள்ளார்.

கருத்தரங்கில் விஞ்ஞான ஆசிரியர்கள் உடற்பயிற்சி ஆசிரியர்கள் சுகாதார வைத்திய அதிகாரிகள், சுகாதாரக்கல்வி அதிகாரி மேற்பார்வைச் சுகாதாரப் பரிசோதகர்கள் ஆகியோர் பங்குபற்றுவார்கள்.

கல்விப் பணிப்பாளர் திரு. வெ. சபாநாயகம், பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் டாக்டர் என், கனக்சபை ஆகியோர் முன்னுரை வழங்குவார்கள்

மாணவர்களின் சுகநிலையை மதிப்பிடுதல் குறைகளை நிவர்த்தி செய்தல், அவர்களில் காணப்படும் பொதுவான நோய்கள் பற்றி தாய் சேய் நல வைத்திய அதிகாரி டாக்டர் ஜி. பொன்னம்பலம் கருத்துரை வழங்குவார்,

ஆரம்ப பாடசாலை மாணவர்களில் காணப்படும் சுகாதாரக் குறைபாடுகளை இக் கருத்தரங்கில் பங்கு பற்றுவோர் இனங்காணுவார்கள். பின்பு பொதுவான நோய்கள் பற்றி கலந்துரையாடுவார்கள். இறுதியில் குழுக்களாகப் பிரிந்து கலந்துரையாடி ஒரு பொதுவான செயல் திட்டத்தை வகுத்து செயல்படுத்துவார்கள், (இ-18)

## மாகாண சபையிடம்

கொழும்பு, ஜன. 9

உள்ளூராட்சி அமைச்சின் சில கடமைகள் மற்றும் அதிகாரங்கள் மாகாண சபைகளிடம் ஒப்படைக்கப்படவுள்ளன.

ஒப்படைக்கப்படவுள்ள அதிகாரங்கள், கடமைகள் எவை என்பது பற்றி உள்ளூராட்சி அமைச்சு அதிகாரிகள் தற்போது பரிசீலனை செய்து வருகின்றனர்.

இது சம்பந்தமாக உள்ளூராட்சி அமைச்சு, மாகாணசபை அமைச்சு அதிகாரிகள் கலந்து கொள்ளும் மாநாடு ஒன்று நாளை 10-ம் திகதி நடைபெறவுள்ளது. (இ-எ)

## தெல்லிப்பளையில் பொலீஸ் பிரிவு

தெல்லிப்பளை அரசினர் வைத்தியசாலையில் பொலீஸ் பிரிவு ஒன்று இயங்க ஆரம்பித்துள்ளது.

இவ் வைத்தியசாலையில் நீண்ட காலமாக பொலீஸ் பிரிவு இல்லாதிருந்தது இதனால் மரண விசாரணைகள் மற்றும் குற்றச் செயல்கள் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ள முடியாதிருந்தது.

இவ்விசாரணைகள் குறித்த பிரதிகளைப் பெற முடியாமலும் மரண அத்தாட்சிப்பத்திரங்களைப் பெற முடியாமலும் பொதுமக்கள் பெரிதும் கஷ்டமுற்றனர்.

இதை அடுத்து காங்கேசன்துறை பொலீஸ் நிலையத்தின் கீழ் இவ் வைத்தியசாலையில் பொலீஸ் பிரிவு ஒன்று அண்மையில் இயங்க ஆரம்பித்துள்ளது. (இ- 68)

## அக்குபங்சர் டிப்புளோமா

வைத்தியர்களுக்கும், வைத்தியக் கல்லூரி மாணவர்களுக்குமான அக்குபங்சர் கல்வியில் போதனையும், வைத்தியசாலை செய்கைமுறைப் பயிற்சியும, பரீட்சையும், தராதரப்பத்திரமும் வழங்கப்படும்.

விவரங்களுக்கு முத்திரை ஒட்டிய தபாலுறையுடன் அனுப்பவேண்டிய முகவரி:

அமைப்பாளர்:-

**ஸ்ரீ லங்கா அக்குபங்சர் சங்கம்,**
**வயாவிளான்.**

(8821)

## 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**திரு. தம்பிமுத்து பூபாலசிங்கம்**
[இலைப்பாறிய பெருந்தெருக்கள் திணைக்கள ஓவசியர்]

தோற்றம்:- 24 - 6 - 23 மறைவு:- 87 - 12 - 22

அன்பாலும் பண்பாலும் பாசத்தாலும் வழிநடத்திய எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்கே!

ஆண்டொன்று சென்றாலும் அணையா விளக்காய் எமதுள்ளத்தில் ஒளிவீசும் எமது அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, மக்கள் மருமக்கள், பேரப்பிள்ளை.

548, காங்கேசன்துறை வீதி.
யாழ்ப்பாணம். [C/1118]

## 2ஆம் வருட நினைவஞ்சலி



தோற்றம்: 22-01-1932

மறைவு: 01 0 -1987

**திரு கணபதிப்பிள்ளை கோபாலபிள்ளை**
(உரிமையாளர், அம்பாள்ஸ்ரோர்ஸ் அன் கபே, முல்லைத்தீவு)

எங்கள் குடும்பத்தின் திருவிளக்காய்
எமக்கெல்லாம் ஒளி வீசி
எம்மை விட்டுப் பிரிந்த
எமது அன்புத் தெய்வமே!
உங்கள் பிரிவினால் தினமும் வாடுகின்றோம்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய என்றும் பிரார்த்திக்கின்றோம்.

அன்புத் தந்தை, தாய், மனைவி, மக்கள், மருமக்கள், சகோதரர்கள், மைத்துனர்கள், உறவினர்கள், நண்பர்கள்.

8 ஆம் வட்டாரம்,
புங்குடுதீவு (8610)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



**அமரர் சின்னையா - இராசையா**
(இளைப்பாறிய மாவட்ட சுகாதார பரிசோதகர்)

தோற்றம்: 25-11-1920 மறைவு: 10-12-1988
திதி: 9-01-1989


எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத்துயில் கொண்ட எமது அன்புத் தெய்வத்தின் இறுதிச் சடங்கில் கலந்து கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதுடன்,

எங்கள் வாழ்விற்கு வழிகாட்டியாயும் பண்பின் சிகரமாயும் பாசத்தின் உறைவிடமாயும் விளங்கி என்றும் எமது மனதில் நீங்காத இடம் கொண்ட எங்கள் அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன் எமது இல்லத்தில் இன்று நடைபெறவிருக்கும் அந்தியேட்டி வைபவத்தில் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள்.

'ராஜ்புவன்'
இராஜவீதி,
அச்சுவேலி வடக்கு,
அச்சுவேலி. [8828]

# 14-ஆம் மாத நினைவு அஞ்சலி



பசிலன்



சிரிசாந்தன்

## தியாக மரணம்: 8-11-1987

வன்னி மண்ணின்
வண்ண மலர்கள் இரண்டு;
வசதியுள்ள பாதையைத் துறந்தன
கடமையுள்ள பாதையைத் தேடின
வனப்பு மிகு இளமைக் காலத்தை

வனாந்தரத்தில் கழித்தன
இலட்சியத்திலே உறுதி கொண்டு
இனம் புரியாத மன வைராக்கியத்துடன்
தாயகத்துக்காய்
தியாகத்துடன்

மண்ணையும் மானுடத்தையும்
நேசித்தமையால்
மரணத்தைத் தழுவிக்கொண்டன.

**இவர்கள் இருவருக்கும் எமது அஞ்சலிகள்!**

— நண்பர்கள்

(7821)

## 90ஆம் நாள் நினைவஞ்சலி



தாயின் மடியில்: 09. 03. 1965

இறைவனடியில்: 13. 10. 1988

திதி: 09. 01. 1989

**திரு. அருளானந்தம் ரவிசந்த்**
(Disco ரவி)

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியையில் அனைவரையும் பங்கு கொள்ளுமாறு வேண்டிக் கொள்ளுகின்றோம்.

அம்மா, அப்பா, சகோதரர், சகோதரிகள், மைத்துனர்மார், மைத்துனி, மாமா, மாமி, மருமகள், பெருமக்கள், நண்பர்கள்.

(8825)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பொய்யாமொழி

**குறள்:**
அறிவிலான் நெஞ்சுவந்து ஈதல் பிறிதுயாதும்
இல்லை பெறுவான் தவம்.

**பொருள்:**
அறிவில்லாதவன் மனம் மகிழ்ந்து ஒரு பொருளைக் கொடுத்தலுக்குக் காரணம், வேறு ஒன்றும் இல்லை; அந்தப் பொருளைப் பெறுகின்றவனுடைய நல்வினையே ஆகும்.


# உதயன்

உண்மை - விருப்பம் - ஒரு நிலைமை

இல. 292/2 நாவலர் வீதி, தொலைபேசி 24805
யாழ்ப்பாணம். 22073
09. 1. 1989 த. பெ. இல 23


## பெயர்களும் மாற்றங்களும்

ஊர்காவற்றுறை என்ற பெயரை காவலூர் என்று மாற்றி எழுதிப் பாவிக்கலாமா?

அந்தப் பெயரை மட்டுமல்ல எந்த ஊரின் பெயரையுமே சுருக்கியோ, மாற்றியோ, திரிபுபடுத்தியோ எழுதக் கூடாது என்று யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் புவியியற்றுறைத் தலைவர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை கருத்து வெளியிட்டிருக்கிறார்.

ஊர்கள், கிராமங்கள் குறிச்சிகளின் பெயர்கள் பல காரண காரியங்கள், சிறப்புத் தன்மைகளின் நிமித்தம் இடப்பட்டவை. பல பெயர்கள் சரித்திரப் பின்னணி கொண்டவை. வேறு பலவும் இடச்சிறப்பை அடிப்படையாகக் கொண்டவை; இன்னும் மிகச் சிலவற்றின் பெயர்கள் அங்கு வாழும் மக்களின் சமூக, தொழில் இயல்புகளைச் சுட்டும் விதத்தில் அமைந்தவை. ஊர்களில் வாழ்ந்த பிரபல்யமானவர்களின் பெயர்களை அடிப்படையாக வைத்தும் ஊர் அல்லது கிராமப் பெயர்கள் எழுந்துள்ளன. இப்போதெல்லாம் புதிய நகரங்கள் உருவாக்கப்படும் போது பெயருக்காக என்று காலத்திற்கேற்ற பெயர்கள் சூட்டப்படுவது உண்டு.

ஊரின் பெயரைச் சுருக்கி எழுதுவதற்காகவும், புதுக்கிவிடும் நோக்கத்துடனும் சிலர் மாற்றி எழுதுவதும் உண்டு. அப்படிச் செய்யும்போது ஓர் ஊரின் சிறப்புத் தன்மைகள் காலப்போக்கில் மறந்து போகும், அவை மறைந்து போகும் அபாயம் உண்டு என்பதை பலரும் மறந்து விடுகிறார்கள். தங்கள் வசதிக்காக, தமது மனதில் எழுந்தவாறு ஒரு சிலர் ஊரின் பெயரை மாற்றிவிட, அதனைப் பார்த்து மற்றவர்களும் அப்படியே எழுத, பழைய பெயர் அருகி மாற்றப்பட்ட அல்லது சுருக்கப்பட்ட புதிய பெயர் வழக்கில் வந்து விடுகிறது.

ஆனால் சரித்திர ஆவணங்கள், புவியியல் ஆவணங்கள், அரசாங்க ஆவணங்கள், உறுதிகள் என்பனவற்றில் பழைய பெயரே அங்கீகரிக்கப்பட்ட பெயராகப் பாவிக்கப்பட்டிருக்கும். ஆவணங்கள், உறுதிகள், பண்டைய பத்திரங்களில் பழைய பெயரும், பாவனையில் திரிபுபடுத்தப்பட்ட பெயரும் மோதும்போது பல வேண்டாத சிக்கல்கள் ஏற்படும் — புதியது சரியா, பழையது தான் சரியானதா, ஊருக்கு உரியதா என்ற சந்தேக நிலையும், குழப்பமும் தோன்றும்.

ஒரு மனிதன் பிறந்தவுடன் சிசுவாக இருக்கும் போதே பெயர் சூட்டப்படுகிறது; பதிவு செய்யப்படுகிறது. அதன் பின் அவன் இறக்கும் வரை பதிவு செய்யப்பட்ட பெயரே உண்மையான பெயராக விளங்குகிறது. பதிவு செய்யப்பட்ட பெயரை உத்தியோக பூர்வமாக, சட்டரீதியாக மாற்றாமல், பட்டப் பெயரையோ புதிய பெயரையோ பாவித்தால் நிதி, சொத்து விடயங்களில் சட்டப் பிரச்சினைகளும் பிணக்குகளும் ஏற்படுகின்றன.

இந்தச் சிக்கல்களும், பிணக்குகளும் ஊர்களின் பண்டைய அங்கீகரிக்கப்பட்ட பெயர்களை மாற்றும் போதும் உருவாகும் என்பதை மறந்துவிடலாகாது. அதற்கும் மேலாக ஊரின் தொன்மைச் சிறப்பையும், சரித்திர முக்கியத்துவத்தையும் மறைத்து விடும்.

அதற்கு நல்ல உதாரணம் ஊர்காவற்றுறை என்பதைக் காவலூர் ஆக்குவதைக் குறிப்பிடலாம். ஊர்காவல், துறைமுகச் செயற்பாடுகளை அடிப்படையாகக் கொண்ட ஊர்காவற்றுறை, காவலூர் ஆகும்போது துறைமுகச் சிறப்பு மறைக்கப்படுகிறது.

சில ஊர்ப் பெயர்களை மாற்றாமல் எழுத்துக்களைத் தப்பாகக் கையாளும் பொழுதே பெயர்களின் அர்த்தங்கள் மாறி, ஊரின் சிறப்பும், தொன்மையும் மறைக்கப்படும் நிலையும் உண்டு.

எனவே ஊர்களின் பெயர்களை சுருக்கி, திரிபுபடுத்தி எழுதுவதும், தப்பான எழுத்துக்களைக் கையாள்வதும் தவிர்க்கப்பட வேண்டும். இழிவுபடுத்தல், உண்மையான சரித்திரத்தை மறைத்தல் என்பனவற்றுக்காக துர்நோக்கத்துடன் இடப்பட்ட பெயர்களை மாற்றவேண்டும் என்று அவசியம் ஏற்படும் பட்சத்தில் அவற்றை உத்தியோக பூர்வமாகச் செய்து ஒழுங்கு முறையான அங்கீகரிக்கப்பட்ட பெயராக்குவது மிகவும் பிரதானம்.

பெயர் மாற்றத்தைக் கண்காணிக்க மாவட்ட ரீதியில் சரித்திர பூகோள நிபுணர்கள் குழு ஒன்று அமைக்கப்படுவது இவ்விடயத்தில் பல வேண்டாத குழப்பங்களையும் குளறுபடிகளையும் தவிர்க்கும்.

---

றேகனுடன் இல்லை - ஆனால்

# புதிய அதிபர் புஷ்ஷுடன் நேரடிப் பேச்சு; லிபியத் தலைவர் கடாபி அறிவிப்பு!

திரிப்பொலி, ஜன. 8

லிபியாவில் கட்டப்பட்டுள்ளதாக அமெரிக்கா கூறிவரும் ரசாயன தொழிற்சாலையை வெளிநாட்டுப் பத்திரிகையாளர் நேற்று சென்று பார்த்தனர்.

ஆனால் அவர்களை தொழிற்சாலையின் உள்ளே சென்றுபார்வையிட லிபிய அதிகாரிகள் அனுமதிக்கவில்லை.

தொழிற்சாலையின் வெளியே விமான எதிர்ப்புப் பீரங்கிகள் நிறுத்தப்பட்டிருந்ததைவெளிநாட்டுப் பத்திரிகையாளர் கண்டனர்.

மத்தியதரைக் கடல் பிரதேசத்தில் வைத்து லிபிய விமானங்கள் இரண்டை அமெரிக்க விமானங்கள் சுட்டு வீழ்த்தியதன் பின்னர்தான், விமான எதிர்ப்புப் பீரங்கிகள் தொழிற்சாலையின் பாதுகாப்புக்கு நிறுத்தப்பட்டன என்று வெளிநாட்டுப் பத்திரிகையாளரிடம் லிபிய அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதற்கு முன்னர், லிபியத்தலைவர் கேர்ணல் மும்மார் கடாபி 200க்கு அதிகமான வெளிநாட்டுப் பத்திரிகையாளர் மாநாட்டில் பேசினார்.

அப்போது அவர் சொன்னதாவது;

புதிய அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷுடன் நேரடிப் பேச்சுக்களை நடத்தலிபியா தயாராக உள்ளது.

ஆனால் லிபியா எக்காரணம் கொண்டும் தனது சுதந்திரத்தை, சுயமரியாதையைறேகன் நிர்வாகத்திடம் சரணடையாது.

தகராறுகள், பேச்சுக்கள் மூலம் தான் தீர்க்கப்படவேண்டும்.

இப்படி கேர்ணல் கடாபி சொன்னார்.

இதனிடையில் – பயங்கரவாதியான லிபியத் தலைவர் கடாபியுடன் அமெரிக்கா நேரடிப் பேச்சுக்களை நடத்தாது என்று ஐ நா.வில் உள்ள அமெரிக்கத் தூதர் ஜெனரல் வால்டர்ஸ் தெரிவித்தார்.

இதேவேளை—

லிபியாவின் இரண்டு மிக் சண்டை விமானங்களை அமெரிக்கா சுட்டு வீழ்த்தியது பற்றி ஐ நா பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் நேற்றும் விவாதிக்கப்பட்டது.

தாக்குதல்சம்பவத்திற்காக அமெரிக்காவைக் கண்டிக்கும் அணிசேரா நாடுகள் அமைப்பு சமர்ப்பித்த பிரேரணை பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில்சமர்ப்பிக்கப்பட்டது.

மத்திய தரைக்கடல் பகுதியில் பதற்றத்தை ஏற்படுத்தும் விதத்தில் நடக்க வேண்டாம் என்றும் அமெரிக்காவை இப் பிரேரணையில் கோரப்பட்டுள்ளது.

இப்பிரேரணையை அமெரிக்கா தனது வீட்டோ உரிமையைப் பாவித்து நிராகரிக்கும் என்று ஐ.நா வட்டாரங்கள் தெரிவித்தன;

இதனிடையில் நேற்று நடந்த விவாதத்தின் போது அமெரிக்கப்பிரதிநிதி ஜெனரல் வோல்டர்ஸ்சுடப்பட்டலிபியா விமானங்களின் இறக்கைகளின் கீழ் ஏவுகணைகள் இருப்பதைக் காட்டுவதாகக் கூறப்படும் புகைப்படங்களை ஏனைய நாடுகளின் பிரதிநிதிகளுக்குக் காட்டினார்:

லிபிய பிரதிநிதி அப்படங்களைப் பார்க்க மறுத்து விட்டார்.

மோசடி செய்யப்பட்ட புகைப்படங்கள் இவை என்று லிபிய பிரதிநிதி தெரிவித்தார்:

சோவியத் பிரதிநிதி பேசுகையில்; சர்வதேச கடலில் வைத்து இன்னொரு நாட்டின் விமானங்களைச் சுட்டு வீழ்த்தும் உரிமை ஒருவருக்கும் இல்லை என்று கூறினார்.

மத்தியதரைக் கடலில் இருந்து அமெரிக்கப் போர்க் கப்பல்கள் வெளியேறினால் மட்டுமே சோவியத் கப்பல்களும் வெளியேறும் என்றும் சோவியத் பிரதிநிதி சொன்னார்:

ஐ. நா. பாதுகாப்புச் சபை இன்று திங்கள் மீண்டும் கூடுகிறது. (எ)

# சோவியத்தில் நிதி நெருக்கடி; பாதுகாப்புச் செலவில் வெட்டு!

மாஸ்கோ, ஜன. 8

சோவியத் யூனியன் எதிர்நோக்கும் மிகப் பெரிய பொருளாதார நெருக்கடியைச் சமாளிக்க பாதுகாப்புச் செலவினத்தைப் பெருமளவு குறைக்கப் போவதாக ஜனாதிபதி மிக்செய்ல் கோர்பச்சேவ் அறிவித்திருக்கிறார்.

வார இறுதியில் பத்திரிகையாளர், விஞ்ஞானிகள் மற்றும் கலைஞர்கள் அடங்கிய குழு ஒன்றை திரு. கோர்பச்சேவ் சந்தித்தார். அவர்கள் மத்தியில் பேசுகையில் தான் அவர் இதனைத் தெரிவித்தார்.

பாதுகாப்புச் செலவினத்தைக் குறைப்பதால் நாட்டின் பாதுகாப்புக்கு ஆபத்து ஏற்படாது. முன்னைய ஆட்சியாளர் பொருளாதார நெருக்கடி பற்றிய உண்மை நிலையை சோவியத் மக்களுக்குத் தெரிவிக்காமல் மூடிமறைத்து விட்டார்கள்.

எண்ணெ விலை வீழ்ச்சி, ஆப்கன் பிரச்சினை, செர்னோபில் அணு ஆலை விபத்து, ஆர்மெனியா இனமோதல் ஆகியன நாட்டின் பொருளாதார நெருக்கடிக்குக் காரணம்.

—இப்படி திரு கோர்பச்சேவ் தெரிவித்தார். (எ)

## ஹிரோஹிட்டோ மறைவு குறித்து பிரிட்டனில் எழுந்துள்ள பிரச்சினை

காலமான ஜப்பானியச் சக்கரவர்த்தி ஹிரோஹிட்டோவின் இறுதிச் சடங்குகளின்போது பிரிட்டிஷ் அரச பரம்பரையைச் சேர்ந்த எவர் கலந்து கொள்வார்?

இக்கேள்வி பிரிட்டனில்பெரும்சர்ச்சையைக் கிளப்பியிருக்கின்றது.

ஸ்கொட்லந்து டான் அம் விமான விபத்து நடந்த இடத்துக்கோ அல்லது அது சம்பந்தமாக பின்னர் இடம்பெற்ற நினைவுக் கூட்டங்களுக்கோ அரச குடும்பத்தைச் சேர்ந்த எவரும் செல்லவில்லை.

இந்த நிலையில்—பிரிட்டிஷ் அரச குடும்ப உறுப்பினர் ஜப்பானிய சக்கரவர்த்தியின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொள்ளச் செல்வதா?— இப்படி பிரிட்டிஷ் பத்திரிகைகள் கேள்வி எழுப்பியுள்ளன.

'நியூஸ் ஒப்தவேர்ல்ட்' பத்திரிகை தனது ஆசிரியர் தலையங்கத்தில்பின்வருமாறுஎழுதியுள்ளது:

இரண்டாம் உலக யுத்தத்தில் ஜப்பான் சிறைகளில் அச்சமயம் அடைக்கப்பட்டு உயிரிழந்த பிரிட்டிஷ் கைதிகளின் உறவினர்கள், யுத்தத்தின்போது இராணுவ அதிகாரிகளினால்தான் மன்னர் ஹிரோஹிட்டோ வழிநடத்தப்பட்டார் என்பதை கடைசிவரை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.

இரண்டாம் உலகயுத்தத்தின்போது மனித குலத்துக்கு அவர் இழைத்த தவறுகளை இலட்சக்கணக்கான மக்கள் மன்னிக்கமாட்டார்கள்.

சண்டே எக்ஸ்பிரஸ் தனது ஆசிரியர் தலையங்கத்தில் எழுதியிருப்பதாவது;

சக்கரவர்த்தி ஹிரோஹிட்டோவின் மரணம் உலக சரித்திரத்தில் வெறிபிடித்த. இரத்தம் தோய்ந்த வரலாறு ஒன்றை முடிவுக்குக் கொண்டு வந்துள்ளது.

## பென்குவின் பறவைகளுக்கு ஆபத்து; அன்டார்டிக்காவில் ஆர்ப்பாட்டம்!

பாரிஸ், ஜன 8

அன்டார்டிக்கா கண்டத்தில் வாழும் பென்குவின் பறவைகளுக்கு ஆபத்து ஏற்பட்டிருப்பதாக கிறீன்பீஸ் சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு நிறுவனம் எச்சரித்துள்ளது.

பென்குவின் பறவைகள் வாழும் பகுதியில் விமானத் தளம் ஒன்றை பிரெஞ்சு ஆராய்ச்சியாளர்கள் நிறுவுவதே இதற்குக் காரணம் என்று கிறீன்பீஸ் நிறுவனம் அறிவித்திருக்கிறது.

அன்டார்டிக்காவில் விமான நிலையம் ஒன்றை அமைப்பதில் ஈடுபட்டிருந்த பிரெஞ்சு அதிகாரிகளை நேற்று கிறீன்பீஸ் இயக்கத் தொண்டர்கள் தடுத்தனர்.

அப்போது ஏற்பட்ட மோதலில் தொண்டர்கள் சிலர் காயமடைந்தனர் பிரெஞ்சு அரசு இதனை மறுத்துள்ளது. (ர)

# சமூகத்துக்கு நீதி கேட்டே கண்ணகி அரசனிடம் சென்றாள்

### இலக்கிய அரங்கில் பேராசிரியர் சண்முகதாஸ் உரை

யாழ்ப்பாணம், ஜன. 9

'கற்புக்கு அரசி கண்ணகி. அவள் குடும்ப நலன் பேணுபவள். அவள் ஓர் அழகி. கோவலனின் ஐம்புலன்களுக்கும் இன்பம் கொடுத்தவள். அவளின் கற்பு சூரியனையும் மறைக்க வல்லது.

யாழ். பல்கலைக்கழக மாணவர் மன்றத்தினால் கைலாசபதி அரங்கில் நடைபெற்ற இலக்கிய அரங்கில் 'தமிழ் இலக்கியத்தில் கற்பு' என்னும் பொருள்பற்றி உரையாற்றும்பொழுது பேராசிரியர் ஆ. சண்முகதாஸ் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தனது உரையில் மேலும் கூறியதாவது;

'கண்ணகி ஒரு சிறந்த குடும்பப்பெண். கோவலன் மாதவியிடம்சென்று வீடு திரும்புகையில் கண்ணகி அவரைப் பார்த்து 'போற்றா ஒழுக்கம் புரிந்தீர்' என்று மட்டுமே கூறுகிறாள்.

கோவலன் இறந்த பின்பு கண்ணகி தீயில் குதிக்கவில்லை.

தனது கணவர் இறந்துவிட்டார் என்பதற்காகவல்ல, சமூகத்துக்காக நீதிகேட்டு அரசனிடம் செல்கிறாள்.

தனது கணவன் கள்வனல்ல என்பதை நிரூபிக்கச் சூரியனை அழைக்கின்றாள்

தனது கற்பின் வலுவினால் மதுரை மாநகரையே தீப்பற்றி எரிய வைக்கிறாள்.

கண்ணகி மதுரையை அழித்த செய்தி காப்பிய நிகழ்ச்சியாக அமைக்கப்பட்டாலும் கற்பின் பெருமையைக் காட்டவே அமைக்கப்பட்டுள்ளது.

கோப்பெருந் தேவி, கண்ணகி என்ற இரு பெண்களின் கற்பு நெறிகளையும் அருகருகே வைத்து இளங்கோ காட்டுவதன் மூலம் பெண்ணின் மனவுரத்தின் சிறப்பினை வெளிப்படுத்தியுள்ளார்.

அதேவேளை கோவலனின் மனவுரமின்மையே குடும்ப நிலையை மட்டுமன்றி நாட்டு நிலையையும் சிதைத்தது என்பதையும் காட்டியுள்ளார்.

உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவர் என்னும் இளங்கோவின் கருத்து பெண்ணின் குணநலன்கள் சிறப்பிக்கப்பட வேண்டியவை என்பதையே மறைமுகமாக உணர்த்துகின்றது.

கற்புபற்றி பேச வந்த வள்ளுவரும் வாழ்க்கைத் துணைநலம் பற்றிக் கூறும்போது 'பெண்ணின் பெருந்தக்க யாவுள கற்பென்னும் திண்மையுண்டாகப் பெறின்' என்று கூறுகின்றார்.

வள்ளுவரும் 'மனைவுரம்' என்ற நிலையில கற்பு பெண்ணிடம் நிலைபெற்றிருந்ததையே விளக்கி உள்ளார்.

தன்னையும் காத்து தன்னைக் கொண்டவனையும் பேணி இருவருக்கும் குடும்பநிலையில் அமைந்த கற்புநெறிச் சொல்லையும் காத்து சோர்வில்லாமல் வாழும் திறமை பெற்றவள் பெண் என் [illegible]

[illegible] பில் பெண்ணின் கற்பு நெறி பெறக்கூடிய சிறப்பினைப்பற்றி வள்ளுவர் சிந்திக்கவில்லை

இல்லறம் என்ற நிலையில் மட்டுமே பெண்ணின் கற்புநெறி சிறப்புறும் என்பது அவர் முடிவாயிருக்க வேண்டும்.

ஆணின் கற்புநெறி பற்றியும் அவர் கருத்து வெளியிடவில்லை.

இதற்கு அவர் காலத்திய பிறபண்பாட்டுத் தாக்கங்களே காரணமாயிருந்திருக்க வேண்டும்.

பழந்தமிழர் வாழ்க்கையை எடுத்துக்காட்டும் சங்கப் பாடல்களில் இதுபற்றி விளக்கப்பட்டுள்ளது.

குடும்பம் என்ற அமைப்பைக் காக்கும் பெண்ணே கற்பு நெறிகளைத் தனது சந்ததியினருக்குப் போதிக்க வேண்டிய சிறப்பான குணவியல் புகளையும் இயற்கையாகவே பெற்றுள்ளாள்.

தாய்மை என்னும்நிலையில் ஆண்களை அவளே வழி படுத்துகிறாள்.

கற்பு நெறிகளை அவளிடமிருந்தே குழந்தைகள் அறிகின்றனர்.

கணவனின் செய்கைகளை எல்லாம் அவதானித்து குடும்ப நிலைக்குப் பங்கம் ஏற்படாத வகையில் அனைவரும் நடந்து கொள்ள அவளே உதவுகிறாள்.

கணவன் கற்புநெறியில் தவறும்போது அவனைத் திருத்துகின்ற பொறுப்பும் அவளுடையது.

இப்படி அவர் கூறினார். (இ-ச)

### விண்ணப்பித்தும் உணவுமுத்திரை இல்லையாம்

காங்கேசன்துறை, ஜன 9

வலிவடக்குப் பகுதியில் உணவு முத்திரை பெறத்தகுதி பெற்றுள்ள குழந்தைகளுக்கு உணவு முத்திரைகள் இன்னுங்கிடைக்கவில்லை இதனால் பெற்றோர் கஷ்டமுறுகின்றனர்

1987 ஜூன் மாதத்திற்கு முன் பிறந்த குழந்தைகளுக்கு உணவு முத்திரைகளை வழங்க விண்ணப்பங்கள் கோரப்பட்டன.

வலி வடக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் ஏராளமான குழந்தைகளுக்கு உணவு முத்திரை கோரி பெற்றோர்கள் விண்ணப்பித்தனர்.

ஆனால் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டனவேயன்றி இதுவரை உணவு முத்திரைகள் வழங்கப்படவில்லை என பெற்றோர் முறைப்பாடுசெய்கின்றனர் (இ- 68)

### ப.நோ.கூ.ச. பொதுக்கூட்டம்

பண்டத்தரிப்பு, ஜன. 9

பண்டத்தரிப்பு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் பொதுக்கூட்டம் எதிர்வரும் ஞாயிறுக்கிழமை நடைபெற ஏற்பாடாகி உள்ளது.

கூட்டத்தில் புதிய இயக்குநர் சபை தெரிவு செய்யப்படும். (ஓ 120)

### 6 ஆம் ஆண்டு வகுப்பு நடத்த அனுமதி

கரவெட்டி, ஜன 9

நாகர் கோவில் கொத்தணிப் பாடசாலைகள் நான்கில் 6 ஆம் ஆண்டு வகுப்புக்கள் நடத்துவதற்கு வட மாநிலக் கல்விப் பணிப்பாளர் திரு. வெற்றிவேலு சமாநாயகம் அனுமதி வழங்கியுள்ளார். (ஓ-70)

பதுளை மாவட்டத்தில் வேலை இழந்த

## உயர் அதிகாரிகளுக்கு மீண்டும் வேலைவாய்ப்பு

கொழும்பு, ஜன. 9

பதுளை மாவட்டத்தில் வேலைக்குச் செல்லாதிருந்தகாரணத்தினால் வேலை இழந்ததாக அறிவித்தல் வழங்கப்பட்ட ஆறு உயர் அரசு அதிகாரிகளுக்கு மீண்டும் வேலை வழங்கப்படவுள்ளது.

இவர்களுக்கு வழங்கப்பட்ட பதவி விலகிய அறிவித்தல்களை வாபஸ் வாங்க அரசு தீர்மானித்து உள்ளது.

இவர்களில் இரண்டு மேலதிக அரச அதிபர்கள், ஒரு உதவி அரச அதிபர், இரண்டு பணிப்பாளர்கள் ஒரு உதவி ஆணையாளர் அடங்குவர்.

சுகவீனம் என்று அறிவித்து விட்டு வேலைக்குச் செல்லாதிருந்த பதுளை அரச அதிபர் விஷயம் அரசின் பரிசீலனையில் இன்னமும் இருக்கிறது. [ச—ஏ]

இலங்கை திரும்பிய அகதிகளுக்கு

## வீடமைப்பு அளவீட்டு படிவம் விநியோகம்

யாழ்ப்பாணம் ஜன 9

யாழ் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் இந்தியவில் இருந்து இலங்கை திரும்பிய அகதிகளுக்கு வீடமைப்பு அளவீட்டுப் படிவங்கள் விநியோகிக்கப்பட்டுவருகின்றன.

யாழ்ப்பாணம் மேலதிக அரசாங்க அதிபர் திரு. இ. ராமநாதர் இதனைத் தெரிவித்தார்

இந்தியாவில் இருந்து இதுவரை 3 ஆயிரத்து நான்கு குடும்பங்கள் தாயகம் திரும்பியுள்ளன.

இவற்றில் ஆயிரத்தி 852 குடும்பங்கள் பிரஸ்தாப படிவங்களைப் பெற்றுள்ளன ஏனைய குடும்பங்கள் இந்தப் படிவங்களை இதுவரை பெறவில்லை

படிவங்களைப் பெற்ற குடும்பங்களிலும் ஆயிரத்து 674 குடும்பங்களே படிவங்களை கையளித்துள்ளன

படிவங்களைப் பெற்று மீள ஒப்படைக்காதவர்கள் உடனடியாக தமது படிவங்களை வீடமைப்பு அதிகாரசபை அலுவலகத்தில் கையளிக்க வேண்டும்.

இதுவரை படிவங்களைப் பெறாதவர்கள் வியாழன், வெள்ளி, சனி ஆகிய கிழமைநாட்களில் முற்பகல் 9மணி தொடக்கம் 11 மணி வரை பெற்றுக்கொள்ள முடியும் என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

### கோக்குவில் பகுதிக்கு நிவாரணம்

கொக்குவில் ஜன 9

கொக்குவில் கிழக்கு கிராம சேவையாளர் பிரிவில் மீளக் குடியமர்தல் நிவாரணமாக தலா ஆயிரம் ரூபா பெறுமதி கட்ட ... 110 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இ... பணம் யாழ். ஸ்ரா... லிவீதி இலங்கை வங்கி கிளையி... பொங்கல் ... த்துக்குப் பின் வழங்கப்பட உள்ளதாக அறியப்படுகிறது (க-69)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுப்பிரிவிக்கி பற்பொடி

ஆயுள்வேத மூலிகை பற்பொடியில் கடுக்காய், சாதிக்காய், நெல்லி திற்பலி, மிளகு, கிராம்பு, வேப்பம்பட்டை, உப்பு முதலியன சேர்த்துத் தயாரிக்கப்பட்டது. இது சகல பல் வியாதிகளையும் குணப்படுத்தி வாய் சுத்தமாகவும் துர்நாற்றமின்றியும் வைத்து இருக்கும். தயாரிப்பு:- சித்தாலேபா

கிடைக்கும் இடம்:

க. செ. கைலாசம்பிள்ளை அன் சன்ஸ்

76, பெரியகடை, யாழ்ப்பாணம்.



# உதயன்

09 - 01 - 1989 திங்கட்கிழமை



## விசாகா சோப்பு

(ஆயுள்வேத வாசனை சோப்)

சகல விதமான சரும வியாதிகளுக்குச் சிறந்தது

சித்தாலேப

கடிமல், தலையிடி, காய்ச்சல், வாதம், நோ, உளைவு முதலிய அநேக நோய்களுக்கு கைகண்டது.

கிடைக்கும் இடம்:

க. செ. கைலாசப்பிள்ளை அன் சன்ஸ்

மருந்துச்சரக்கு வியாபாரம்,

யாழ்ப்பாணம்.


## வீடு கட்ட, தொழில் ஆரம்பிக்க பாதிக்கப்பட்டோருக்கு கடன்

### வழங்க வங்கிகள் இணக்கம்

கொழும்பு, ஜன 9 வன்செயல்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வீடு கட்டவும், தொழிலை மீண்டும் ஆரம்பிக்கவும் கடன் வழங்க முன்னணி வங்கிகள் புனர்வாழ்வு அமைச்சுடன் உடன்பாடுகள் செய்துள்ளன.

மக்கள் வங்கி, இலங்கை வங்கி, அரச அடமான வங்கி, ஹட்டன் நஷனல் வங்கி, வீடமைப்பு நிதி- கூட்டுத் தாபனம் ஆகியன இந்த உடன்பாடுகளின் அடிப்படையில் தொழிலை ஆரம்பிப்பதற்கு இரண்டு லட்சம் ரூபா வரையும்; வீடு கட்டுவதற்கு ஒன்றரை லட்சம் ரூபா வரையும் கடன் வழங்கும்.

இத் தகவலை புனர்வாழ்வு அமைச்சு உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இன, தீவிரவாத மோதல்களினால் பாதிக்கப்பட்டவர்கள் இக் கடனுக்கு விண்ணப்பிக்கத் தகுதி பெற்றிருக்கிறார்கள்.

கடன் விண்ணப்பங்கள் புனர்வாழ்வு அமைச்சினால் கோரப்படும். அவை சம்பந்தப்பட்ட கிராம சேவையாளர், உதவி அரச அதிபர் ஆகியோரினால் சிபாரிசு செய்யப்பட வேண்டும்.

சேதம் மதிப்பிடப்பட்டு, கடனைத் திருப்பிச் செலுத்தக் கூடிய தகுதியையும் பார்த்தே கடன் வழங்கப்படும்.

பாதிக்கப்பட்டவர்கள் இரண்டு கடன்களுக்கும் விண்ணப்பிக்க முடியும் — என்றும் அந்த அதிகாரி தெரிவித்தார். (அ-எ)

## முள்ளியவளையில் கொள்ளைகள்!

யாழ்ப்பாணம், ஜன 9 முள்ளியவளைப் பகுதியிலும் இரவுநேரக் கொள்ளைகள் அண்மைக் காலமாக அதிகரித்துவருகின்றன.

கடந்த ஐந்தாம் திகதி முள்ளியவளைப் பகுதியில் ஆயுதங்களுடன் வந்த கோஷ்டி ஒன்று ஐந்து வீடுகளில் கொள்ளையடித்துச் சென்றது. (உ-10)

## மின்சாரசபைக்கு 5 வாகனங்கள்

யாழ்ப்பாணம், ஜன 9 இலங்கை மின்சார சபையின் யாழ் பிராந்திய பணிமனைக்கு ஐந்து புதிய வாகனங்கள் சபையினால் கடந்தவாரம் வழங்கப்பட்டன.

புதிய வாகனங்கள் கிடைத்திருப்பதால் மின்சாரசபையின் வேலைகளைத் துரிதமாக மேற்கொள்ளலாம் என சபையின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். [உ-10]

## பருத்தித்துறையில் இந்திய அதிகாரிகள்

வல்வெட்டித்துறை ஜன 9 பருத்தித்துறையிலுள்ள ஹாட்லிக் கல்லூரிக்கும், மெதடிஸ்த மகளிர் பாடசாலைக்கும் கடந்த ஞாயிற்றுக்கிழமை இந்திய உயர் அதிகாரிகள் குழு ஒன்று திடீர் விஜயம் செய்தது.

இவர்களது விஜயத்தை முன்னிட்டு அப்பகுதியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது. (ஓ-160)

## நூல்கள் அபகரிப்பு

பருத்தித்துறை ஓராங்கட்டைச் சந்திக்குச் சமீபமாகவுள்ள மாணவர் பொது நூலகம் உடைக்கப்பட்டு பெறுமதிமிக்க நூல்கள் மற்றும் ஒலிபெருக்கி போன்ற உபகரணங்கள் அபகரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. [ஓ-160)

### யாழ்நகரில் எதிர்வரும் 28ஆம் திகதி

## 19 பரீட்சை மண்டபங்களில் ஆசிரியர் தெரிவு பரீட்சை

யாழ்ப்பாணம், ஜன.9 ஆங்கில ஆசிரியர்களைத் தெரிவு செய்வதற்கான போட்டிப் பரீட்சை யாழ் நகரில் 19 பரீட்சை மண்டபங்களில் நடைபெறவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகளை யாழ். கல்விப் பணிப்பாளர் திரு. வெற்றிவேலு சபாநாயகம் மேற்கொண்டுள்ளார்.

இம் மாதம் 28ஆம் திகதி இந்தப் போட்டிப் பரீட்சை நடைபெறவுள்ளது.

இதற்கான வினாத்தாள்கள் கல்வி அமைச்சினால் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் அடுத்த சில வாரங்களில் அவை யாழ்ப்பாணம் வந்து சேரும் எனவும் அறிய வருகிறது.

மேற்படி போட்டிப் பரீட்சையில் இரண்டாயிரத்துக்கும் அதிகமானோர் தோற்றவுள்ளனர். (ஓ-10)

## குளிரில் 10 பேர் பலி!

புதுடில்லி, ஜன 9 கடுங்குளிர் காரணமாக பஞ்சாப், இமாசலப் பிரதேசப் பகுதியில் பத்துப்பேர் நேற்று உயிரிழந்தனர். (உ-எ)

## 'பிரா' உரிமை கோருகிறது

கொழும்பு, ஜன 9 நாட்டின் தென்பகுதியில் வெள்ளி, சனி ஆகிய தினங்களில் எட்டு சடலங்களை பொலிஸார் கண்டு பிடித்தனர்.

அம்பாந்தோட்டை, மற்றும் உகங்கம, அம்பலாங்கொடை ஆகிய இடங்களில் கண்டெடுக்கப்பட்ட மூன்று சடலங்களுக்கும் 'பிரா' இயக்கம் உரிமை கோரியுள்ளது. [ஓ-எ]


### A/L 89 DAY CLASS PHYSICS

ஆசிரியர்:

R. சத்தியசீலன்

ஒட்டமின்னியல்

ஆரம்பம்:

10-01-89

Tues. 8-30 a.m.

B.M.C. முன்லேன், யாழ்ப்பாணம்.

(C/1122)


### அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டாலும்

## பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் தொடர்ந்து அமுலில் இருக்கும்

கொழும்பு, ஜன 9 அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டாலும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் அரசியல் சாசனத்தில் இருக்கும்.

அதனால் பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் தொடர்ந்தும் அமுலில் இருக்கும்.

இச் சட்டப்படி ஒருவரைக் கைதுசெய்து விசாரணை எதுவுமின்றி 18 மாதங்களுக்குத் தடுத்து வைக்க பாதுகாப்பு அதிகாரிகளால் முடியும்.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை ரத்துச் செய்ய வேண்டும் என்று பொதுவான கோரிக்கை ஒன்று விடப்படுமிடத்து அதைப் பற்றிப் பேச்சுக்கள் நடத்த ஜனாதிபதி திரு பிரேமதாஸ தயாராக இருப்பதாக தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன;

— இப்படியான கோரிக்கை, பாதுகாப்புச் சூழ்நிலை சரியாக இருக்கும் சமயத்தில் விடப்பட வேண்டும் என்றும் அவ் வட்டாரங்கள் தெரிவித்தன.

நாடாளுமன்றத் தேர்தல் முடிவடைந்த பின்னரே இது பற்றிய பேச்சுக்கள் நடைபெறும் என்றும் —

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை ரத்துச் செய்வதற்கான அதிகாரம் நாடாளுமன்றத்திடம் இருப்பதே இதற்கு காரணம் என்றும் அவ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (உ-எ)

## நட்புறவு.....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விடயங்கள் குறித்தே முரண்பாடு நிலவுகிறது ஒன்று, திருகோணமலைத் துறைமுகம் பற்றியது. அது இந்தியாவுக்குப் பாதகம் விளைவிக்கக் கூடிய விதத்தில், இராணுவ ரீதியில் பயன்படுத்த வேறு எந்த நாட்டிற்கும் திருமலைத்துறை முகத்தைக் கொடுக்கக் கூடாது என்பதாகும்.

இரண்டாவது, இலங்கையில் நிறுவப்படும் வெளிநாட்டு ஒலிபரப்பு நிலையங்களை இராணுவ நோக்கங்களுக்குப் பயன்படுத்த அனுமதிக்கக் கூடாது.

இந்த இரண்டு விடயங்களும் நாடுகளுக்கு இடையேயான சமத்துவ நிலையைப் பேணும் அடிப்படைக் கொள்கையை மீறுகின்றன. அதாவது இலங்கையைக் கட்டுப்படுத்தும் அதே வேளை இந்தியாவைக் கட்டுப்படுத்தவில்லை இந்தியாவையும் கட்டுப்படுத்தக் கூடியதாக இவை அமையவேண்டும் என்று இலங்கை அரசு விரும்புகிறது.

"இந்த இரண்டு விடயங்கள் குறித்தும் நாம் பரஸ்பர பேச்சுக்கள் மூலம் புரிந்துணர்வை ஏற்படுத்தலாம். ஒப்பந்தத்தில் வேறு பெரிய குறைகள் இல்லாததினால், இந்த இரண்டு விடயங்களில் எம்மையும் கட்டுப்படுத்தக்கூடியதான ஷரத்துகளை ஒப்பந்தத்தில் சேர்த்துக் கொள்ள முடியும்" — என்றும் அந்த அதிகாரி தெரிவித்தார். (அ-எ)

## வயோதிபர்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யினர் தேடுதல் நடத்தினர்.

அவ்வேளை செல்லத்துரை [வயது 70] என்ற வயோதிபர் சூட்டுக்கு இலக்காகி மரணமானார்.

இச்சம்பவத்தை அடுத்து அப்பகுதியில் வேலை செய்து கொண்டிருந்தவர்கள் வீடுகளுக்குத் திரும்பினர். எங்கும் பதற்றம் நிலவியது [ஓ-163]

## மின்....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

காலையில் வடக்கிற்கு கிடைத்தது. இது குடாநாட்டிற்கு முழு அளவில் மின்சாரம் வழங்குவதற்குப் போதுமானதல்ல ஆகையினால் குடாநாட்டில் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே மின் விநியோகம் இடம்பெறும் என சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நேற்றுக் காலையில் தெரிவித்தனர்.

ஆனால் இரவில் மின் விநியோகம் [illegible] ட்டது. (உ-10)

## ஜனாதிபதி கூட்டும் மாநாடு

கொழும்பு, ஜன 9 வறுமை ஒழிப்பு நிவாரணத் திட்டத்தைச் செயற்படுத்துவதற்காக 22 மாவட்டங்களில் உள்ள கச்சேரிகளில் விசேட பிரிவுகள் திறக்கப்படவுள்ளன.

இது பற்றி ஆராய அரச அதிபர்கள் மாநாடு ஒன்று நாளை கொழும்பில் நடைபெறவுள்ளன.

புதிய ஜனாதிபதி பிரேமதாஸ இம்மாநாட்டில் உரை நிகழ்த்தவுள்ளார்.

நாட்டில் சிவில் நிர்வாகத்தை மீண்டும் ஸ்திரப்படுத்துவது, எதிர்வரும் நாடாளுமன்ற பொதுத் தேர்தல் ஆகியன குறித்தும் ஜனாதிபதி இம்மாநாட்டில் ஆராய்வார். (உ-எ)


## சாரதி தேவை

அனுபவமுள்ள சாரதி ஒருவர் தேவை. நேரில் வரவும்.

'ஷப்ரு',

207, மின்சார நிலையவீதி, யாழ்ப்பாணம்

## Diploma in Home Economics

Cake - icing
Cookery
Flower - Making
Glass & Fabric Painting
கோலங்கள் போடுதல்
Handi - craft (மக்றமி, நூல்வேலை, வைக்கோல் வேலை, சிப்பி வேலை- போன்ற அலங்காரப் பொருட்கள் செய்தல்).
Needle work
Hair - Styling

★ பயிற்சிக் காலம் 6 மாதங்கள்

★ பயிற்சியின் முடிவில் 'Diploma in Home Economics' தகைமைச் சான்றிதழும் ஒவ்வொரு பாடங்களின் திறமைகளுக்கேற்ப பிரத்தியேக திறமைச் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

பயிற்சிகள் ஆரம்பம்: 18 - 01 - 89

★ தொழில் புரியும் பெண்களின் வசதி கருதி ஞாயிற்றுக்கிழமை வகுப்புக்களும் 22 - 01 - 89 அன்று ஆரம்பமாகின்றன.

விபரங்கட்கு:-

KALALAYAAH (Regd)

(Academy of Culinary & Fine Arts)

VICTORIA ROAD, JAFFNA.

(C-1257)


## மரண அறிவித்தல்

### திரு. ஆறுமுகம் நாகலிங்கம்

தெல்லிப்பளை மேற்கு, கருகம்பனையை சேர்ந்த மலாயன் பென்சனர் ஆறுமுகம் நாகலிங்கம் சிவபதம் அடைந்தார். இவர் சொர்ணநாயகத்தின் அன்பு கணவரும், மகேஸ்வரி, டாக்டர் ஞானேஸ்வரி (லண்டன்), பரமேஸ்வரி (சிங்கப்பூர்), ஞானம்பிகா (கோவில்வீதி, யாழ்ப்பாணம்). டாக்டர் சிவசுப்பிரமணியம் (அவுஸ்திரேலியா), டாக்டர் பூபாலசிங்கம் (லண்டன்), கணேசமூர்த்தி (ஹொங்கொங்) ஆகியோரின் அருமைத் தந்தையும்; காலஞ்சென்ற சேதுகாவலர், டாக்டர் சுந்தரலிங்கம் (லண்டன்), டாக்டர் குகதாசன் (சிங்கப்பூர்), வேலாயுதம்பிள்ளை (சிரேஷ்ட கூட்டுறவு ஆணையாளர் கொழும்பு.) லோகநாயகி (அவுஸ்திரேலியா), பவானி (லண்டன்) காயத்திரி (ஹொங்ஹொங்) ஆகியோரின் அன்பு மாமனாரும்; அனுசூயா ராஜேந்திரன் (லண்டன், சௌதாமினி சிவலிங்கம் (லண்டன்), உஷா (அவுஸ்திரேலியா), ரவிந்திரன் (அவுஸ்திரேலியா), சுகி பாலேந்திரா (லண்டன்), ருக்ஷினி (லண்டன்), ஸ்ரீரஞ்சினி (லண்டன்), சிங்கப்பூரிலுள்ள பிரசாந்தி, தர்ஷி, துஷ்யந்தி, குபாலிகா ஆகியோரினதும், வாசுகி, வசுமதி, அவுஸ்திரேலியாவிலுள்ள ஸ்ரீபிரியன், ஸ்ரீவித்யா ஆகியோரினதும், லண்டனிலுள்ள அரன், வனஜா, ஆகியோரினதும், ஹொங்கொங்கிலுள்ள பானு, ரூபன் ஆகியோரின் அன்புப் பேரனும், ரகு, ஜானகி, கோபி, ஜீவன், சந்திரா ஆகியோரின் அன்பு பூட்டனும், காலஞ்சென்ற தம்பையா, தங்கமுத்து, கிருஷ்ணசாமி ஆகியோரின் அன்பு சகோதரனும், காலஞ்சென்ற தங்கம், சிவஞானம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் கீரிமலை மயானத்திற்கு இம்மாதம் பத்தாம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு எடுத்து செல்லப்பட்டு தகனம் செய்யப்படும். எல்லா உற்றாரும் உறவினரும் நண்பர்களும் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

தகவல்:
மனைவி, மக்கள்.

(8636)

## மரண அறிவித்தல்கள்

### தெட்சணாமூர்த்தி புஸ்பராசலிங்கம்

(சுஜீதா சதிரைக்கடை- உரிமையாளர் தட்டாதெருச் சந்தி, யாழ்ப்பாணம்)

தெட்சணாமூர்த்தி புஸ்பராசலிங்கம் காலமானார். அன்னார் வண்ணார்பண்ணை கலட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் சேச்லேன் கொக்குவிலை வசிப்பிடமாகக் கொண்டவரும், இராசபூபதியின் அன்புக் கணவரும், தனுசன் (சுவிற்சலாந்து) சுவர்ணா (கொக்குவில் இந்துக் கல்லூரி) சுஜீதா (யாழ் இந்து மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலம் சென்ற திரு. திருமதி கி. துரைராசா ஆகியோரின் அன்பு மருமகனும், காலம் சென்ற தவராசலிங்கம் (தனம்)- யாழ் மாநகரசபை) சிவராசலிங்கம் (I O.- யாழ் உள்ளூராட்சித் திணைக்களம்) ஜெயராசசிங்கம் (இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனம்) ஜெயபாலன் (ஆசிரியர் சகிராக் கல்லூரி 'மாத்தளை) திருமதிகள் புஸ்பரோசாமணி, மீனாம்பிகை, ஜெயந்தி ஆகியோரின் உடன்பிறந்த மூத்த சகோதரரும், T. இராசரத்தினம் (யாழ் உணவுத் திணைக்களம்), சிவா - தேவதாஸ்- (W. S-நீர்ப்பாசனத் திணைக்களம் வவுனியா), த. காங்கேசபிள்ளை (ஆசிரியர் யாழ் இந்துக்கல்லூரி) காலம் சென்ற திருமதி கனகமலர், திருமதிகள் செல்வரஞ்சிதம் பரமேஸ்வரி, சிவநேசமலர் (ஆசிரியை பாக்கியம் வித்தியாலயம் மாத்தளை) து. தர்மபாலன் (சுவிற்சலாந்து), து. குணபாலன் (சுவிற்சலாந்து) ஆகியோரின் அன்பு மைத்துனரும், திருமதிகள் ரமணி (சுவிற்சலாந்து) சரோஜினிதேவி (கனடா) ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

ஈமக்கிரியைகள் 09-01-1989 திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு கொக்குவில் மயானத்தில் நடைபெறும்.

தகவல்
மனைவி - பிள்ளைகள்

சேச் லேன்,
குளப்பிட்டி,
கொக்குவில்

(8830)

### திருமதி மங்கயற்கரசி சுப்பிரமணியம்

முன்னாள் கிராம சபைத் தலைவரும் ஓய்வு பெற்ற மலேசியன் Pensioner ருமான காலஞ்சென்ற க. சுப்பிரமணியத்தின் அருமை மனைவி மங்கயற்கரசி 8-1-89 இல் காலமானார். இவர் வாமதேவன் (முகாமையாளர், Commercial Bank Ltd, Colombo), காலஞ்சென்ற மகாதேவன், சகாதேவன் (முகாமையாளர், (Odeon Cinema Kandy), பாலதேவன் (Executive, Vaitilingam & Co Ltd, Colombo) சத்தியதேவன் (கனடா], காலஞ்சென்ற ஜெயதேவன் நகுலதேவன், பரமேஸ்வரி [மலேசியா], சரோஜினிதேவி, (ஆசிரியை), கமலாதேவி, விஜயதேவி, இந்திராதேவி, ஜெயதேவி ஆகியோரின் அன்புத் தாயாரும் மகேஸ்வரி, ஞானமணி, பரமேஸ்வரி, மகாலட்சுமி (ஆசிரியை), நிர்மலா, காலஞ்சென்ற குமாரசுவாமி, சின்னராசா, சண்முகதாஸன், சுந்தரராஜன் (Oman) சிவபாதம்(Kuwait) செல்வரட்ணம் (City Medical Colombo) ஆகியோரது அன்பு மாமியாரும், குமரேந்திரன் (சட்டத்தரணி மலேசியா) குமாரரட்ணம் (ஆசிரியை, மலேசியா) அரியரட்ணம், அரியகுட்டி, சகுந்தலா, வரதராஜா, ஜெயராஜ் (Vaitilingam & Co; Jaffna) இராஜகிரி (India), சிறிதாஸ் (K. G Industries Ltd. Colombo) சூரியகலா (Shabra Unico Finance Ltd, Jaffna) குமாரிகலா (City Medical Jaffna) ஜெகதீஸன், செந்தில்குமார், நடராஜன், சிவகரன், தாஷிக்கா, மயூரன் செந்தூரன், நிருஷா ஆகியோரின் அன்புப் பேத்தியாருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (9-1-89) முற்பகல் 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார் உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன்.

தகவல்:
S. சின்னராசா
துணவி
வட்டுக்கோட்டை.

(C/1251)

### சிற்றம்பலம் அயிராமிப்பிள்ளை

திருமதி சிற்றம்பலம் அயிராமிப்பிள்ளை 8-1-1989 இல் காலமானார். அன்னார் கந்தர் சிற்றம்பலத்தின் அன்பு மனைவியும், காலஞ் சென்ற சி. தம்பிராசா, தியாகராசா (மத்திய மகா வித்தியாலயம்), சி பாலசிங்கம் (பெருந் தெருக்கள் திணைக்களம் வவுனியா). திருமதி P. தம்பிப்பிள்ளை, (V R தம்பிப்பிள்ளை வர்த்தக உரிமையாளர் கிளிநொச்சி), திருமதி வி. மகேஸ்வரி ஆகியோரின் தாயாரும் ஆவார். அன்னாரின் இறுதிச் சடங்கு 09-01-89 திங்கட்கிழமை (இன்று) காலை தில்லை மயானத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள் அனைவருக்கும் அறியத்தருகிறோம்.

தகவல்:
குடும்பத்தினர்

(8641)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் (09 - 01- 1989) அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Printed and Published by New Uthayan Publications (pvt) Ltd 292/2 Navalar Road, Jaffna on Monday 09th January 1989


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org